# ஞானச்சுடர்





ஆனி 2023

306ஆவது மலர்

ஓம் முருகா

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



## குறள் வழி

**அவாவினை யாற்ற அறுப்பின் தவாவினை**
**தான்வேண்டு மாற்றான் வரும்.**

**பொருள் :** ஒருவன் அவாவை முற்றாகக் கெடுக்க வல்லவனானால் அவன் கெடாமைக்கேதுவாகிய முயற்சி தான் விரும்பிய வழியில் தானே உண்டாகும்.

(367)

**அவாஇல்லார்க் கில்லாகுந் துன்பம் ஃதுண்டேல்**
**தவாஅது மேன்மேல் வரும்.**

**பொருள் :** ஆசையில்லாதவர்களுக்குத் துன்பம் வராது; அது இருந்தால் துன்பம் மேலும் மேலும் முடிவில்லாமல் வரும்.

(368)

---

## நற்சிந்தனை

*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**நிகரில்லாத இன்பம் நிறையுமே**



அன்று மின்று மென்று முள்ளவன்
என்று மெங்க ளகத்துள் நிறையுமே 01

ஆக்கையே கோவில் அகஞ்சிவ லிங்கம்
பூக்கைக் கொண்டு பொன்னடி போற்றுதும் 02

இல்லை யுண்டென்று சொல்லவொண் ணாதவன்
நல்லூரில் வாழும் நற்றவ ராசனே 03

உம்பர் தலைவ னுயர்கை லாயன்
செம்பொ னம்பலத்தே திருநடனம் புரியுமே 04

ஊரும் பேரு மில்லா வொருவன்
சீருந் திருவுமாயென் சிந்தையுள் நிற்குமே 05

எண்ணு மெழுத்துமாய் நின்றிடு மெந்தை
கண்ணுக்குக் கண்ணாய் கலந்து நிற்குமே 06

ஏகம்பம் மேவி ஏந்திழை கலக்கம்
போக வருள்செய்தான் புண்ணிய மூர்த்தியே 07

ஐங்கரத் தொருகோட் டானையைத் தந்தவன்
அங்கு மிங்கு மெங்குமாய் நிற்கும் 08

ஒருபொல் லாப்பு மில்லையென் றோதினான்
திருவாழும் நல்லைத் தேசிக மூர்த்தியே 09

ஓங்கா ரத்தில் உதித்த வுலகெலாம்
ஓங்கா ரத்தில் ஒடுங்கு முண்மையே 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 306

**2023** **பொருளடக்கம்** **ஆனி**


| | | |
|---|---|---|
| ஆலய வழிபாடு | கு. சோமசுந்தரம் | 01 - 04 |
| பொறாமை | மு. செல்லத்தம்பி | 05 - 06 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 07 - 09 |
| விஞ்ஞானத்தை விஞ்சிய... | பு. கதிரித்தம்பி | 10 - 11 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 12 - 16 |
| வம்சங்களும் வரலாறுகளும் | இராம ஜெயபாலன் | 17 - 18 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 19 - 20 |
| தவபூமியில் இணுவில்... | கே.எஸ். சிவஞானராஜா | 21 - 22 |
| பக்தி | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 23 - 24 |
| குங்கும மகிமை | திருமதி பொ. செல்வக்காந்திமதி | 25 - 27 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 28 - 31 |
| தித்திக்கும் திருவாசகத்தேன் | திருமதி நா. சந்திரலீலா | 32 - 35 |
| தமிழ்ப் பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 36 - 39 |
| பட்டினத்தார் வாக்கில் நாய் | முருகவே பரமநாதன் | 40 - 44 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் வைகாசி மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:



305ஆவது மலராக வெளிவந்த வைகாசி மாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றுவதற்குரியவர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் வராதபட்சத்தில் வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் உறுப்பினரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியருமாகிய திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தம் உரையில் ஆச்சிரமம் ஆற்றும் பலவித பணிகளையும் வியந்து கூறியதோடு நானும் இப் பேரவையோடு நீண்டகாலத் தொடர்பில் இருக்கின்ற காரணத்தினால் இங்கே நடக்கும் செயல்கள் அனைத்துக்கும் சந்நிதியானின் திருவருளே மூலகாரணமாக விளங்குகின்றது என்பது கண்கூடு. அதோடு எமது சமய எழுச்சிக்கு ஒரு அனுபவமாகவும் விளங்குகின்றது.

ஒரு ஆன்மீகம் சார்ந்த மலர் முற்றுமுழுதாக வெளிவரவேண்டுமானால் அதற்கு பின்புலமாக ஒரு சக்தி ஒன்று இயங்கினால்தான் இவ்வகைச் செயற்பாடு நடைபெறும். ஞானச்சுடர் 305 மாத காலமாக தொடராக வெளிவருவதற்கு சந்நிதி வேலவனே பின்புலமாக இங்கே இருக்கின்றான். அந்தவகையில் இம்மலர் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகின்றது என்று கூறி, மலரில் இடம்பெற்ற ஒரு சில ஆக்கங்கள் பற்றிய விமர்சனத்தோடு தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

ஆன்மா லயப்படும் இடங்களே ஆலயங்கள் ஆகும். எனவேதான் உடல் சுத்தி செய்து உளத்தை சுத்திசெய்ய ஆன்மாக்கள் ஆகிய நாம் ஆலயங்களை நோக்கிச் செல்கின்றோம். கோ+ல் என்பது உலகப் பரம்பொருளாகிய இறைவனின் இல்லம் ஆகும் என்பதை நாம் உணர்தல் வேண்டும். இறைவனை வழிபடுவது இறைவனை மகிழ்விப்பதற்கு அன்று என்பதை நாம் முதலில் உணர்தல் வேண்டும். இறைவனை வழிபடுவது, வாழ்த்துவது நாம் வாழ்வதற்கே என்பதில் தெளிவுபெற வேண்டும். இப்பிரபஞ்சத்தில் எமக்கு மனித வாழ்வு கிடைத்தது பெரும் பாக்கியமேயாகும். இம் மனித வாழ்வுபெற்ற நாம் எமது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் உயர்வாகப்பேணி மனித வாழ்வின் இலட்சியத்தை அடையவேண்டும். "நமக்கு இவ்வுடல் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" என்பது நாவலர் பெருமானின் சிந்தனையாகும். நாம் இறைவனிடம் வேண்டுவது ஒன்று எம்மைப் படைத்த அவனுக்கு நன்றி செலுத்துவது. மற்றது நாம் செய்த தவறுக்காக மன்னிப்புக்கோருவது.

ஆனால் சந்நிதி வேலவனின் உற்சவகாலம் நெருங்கி வருவதால் இன்றைய மனித சமூகம் தாம் ஒழுகவேண்டிய நெறிகளையும் விழுமியங்களையும் நழுவவிட்டு அநாகரிக வாழ்வை சிரமேற்கொண்டு செயற்படுவதை சுடர் வன்மையாகக் கண்டிக்கிறது. மேலான பரம்பொருளை தரிசிக்கச்செல்லும்போது எமது பண்பாட்டையும் கலாசாரங்களையும் கைவிட்டு அருவருப்பான உடைகளுடன் சென்றால் இறைவனும் கண்ணெடுத்துப் பார்க்கமாட்டான். வெளி அலங்காரங்களை மேன்மைப்படுத்தாது தலைவிரி கோலங்களாக செல்லாது உளத்தூய்மையுடன் "பரம்பொருளின் பெரும் புகழை பாடிப்பணிதலின்றி பிறவார்த்தை பேசற்க ஆலயத்துள்" என்ற மகுடவாசகத்தை மனதில் பதித்து ஆண்களும் பெண்களும் தமக்கு வகுக்கப்பட்டுள்ள ஆடைகளை அணிந்து சென்று ஆண்டவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அதையே இறைவனும் ஏற்றுக்கொள்வான் என்பதை மனதில் தெளிவுபடுத்த வேண்டும். இறைவனுடைய சந்நிதானத்தில் அவனருளைப் பெறவேண்டுமாயின் அவன் விரும்பியதை நாம் செய்ய வேண்டும். எல்லோரும் வழிபட வழிசெய்து புற அழகை மேன்மைப்படுத்தாது அக அழகை மேன்மையுறச் செய்வதே சமூகத்துக்கும் பண்பாட்டுக்கும் நாம் செய்யும் நன்றிக்கடனாகும் என்பதை நினைவுறுத்திக்கொள்ளுவோம். மன்னிப்புக் கேட்கச்சென்று மன்னிப்பே கேளாமல் பாவ மூடைகளை அதிகரித்துக்கொள்வது மனிதப்பிறவிக்கே கேடானது என்பதை இச்சந்தர்ப்பத்தில் சுடர் வலியுறுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகா நீ வரவேண்டும்

-திருமதி பரமேஸ்வரி நடராஜா-

கொஞ்சிக் கொஞ்சி விளையாட முருகா
குழந்தையாய் நீயும் வரவேண்டும்.

காலமெல்லாம் களித்திருக்க முருகா
பாலனாய் நீயும் வரவேண்டும்.

ஞாலமெல்லாம் உய்ந்திடவே முருகா
ஞானச் சுடராய் நீயும் வரவேண்டும்.

சோதனையில் வெற்றிபெற முருகா
சோதி முகமாய் நீயும் வரவேண்டும்.

வேதனையில் வாடும்வேளை முருகா
வேல் முகமாய் நீயும் வரவேண்டும்.

பாதகங்கள் போக்கிடவே முருகா
வேத முகமாய் நீயும் வரவேண்டும்.

கூறுமடியார் குறைபோக்க முருகா
ஆறு முகமாய் நீயும் வரவேண்டும்.

பாடியுனைப் பணிவோரை முருகா - நீயும்
தேடி வரவேண்டுமப்பா முருகா.

வரவேண்டும் வரவேண்டும் திருமுருகா - எங்கள்
குலம் விளங்க வரவேண்டும் முருகா.

வரவேண்டும் வரவேண்டும் முருகா - எம்
மனைவிளங்க வரவேண்டும் முருகா.

வரவேண்டும் வரவேண்டும் முருகா - எங்கள்
வளநாடு நலம்பெற வரவேண்டும் முருகா.

வரவேண்டும் வரவேண்டும் முருகா - இந்த
வைய முய்ய வரவேண்டும் முருகா.

காத்திருந்தோம் காத்திருந்தோம் முருகா - உன்
கருணை முகம் காண்பதற்கு முருகா.

சீக்கிரமாய் வந்திடப்பா முருகா - உன்
சிரித்த முகம் காட்டிடப்பா முருகா.

குறை தீர்க்கும் குருமணியே முருகா
மறை போற்றும் மாமணியே முருகா.

வரவேண்டும் வரவேண்டும் முருகா - எங்கும்
திருப் பொலிய வரவேண்டும் முருகா.

வரவேண்டும் வரவேண்டும் முருகா - எம்மைப்
பிரியா தென்றும் குடியிருக்க வரவேண்டும் முருகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. பரமநாதன்**
(அளவெட்டி மத்தி)

**Dr க. சிவநேசன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**பொ. வியாகேஸ்**
(நிர்வாகி, பீக்கன் கல்வி நிறுவனம், உடுப்பிட்டி)

**ம. ஸ்ரீகாந்தன்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)

**செல்வி ஞானசரஸ்வதி சின்னத்தம்பி**
(நாளையார் வளவு, காங்கேசந்துறை)

**கந்தையா ஏகாம்பரம்**
(புறாடிலேன், அரியாலை)

**சி. நடேசமூர்த்தி J.P**
(வங்கி ஊழியர், அச்சுவேலி)

**சி. கதிரவேலு**
(தொண்டைமானாறு)

**ஐ. சிவநாதன்**
(மருதம், நெல்லியடி)

**செல்வி S. ஜடா**
(புலோலி தெற்கு, புலோலி)

**க. இராசதுரை**
(நீர்வேலி)

**வ.சி. கணபதிப்பிள்ளை**
(ஆவரங்கால், புத்தூர்)

**பா. சாருஜன்**
(மல்லாகம்)

**உரிமையாளர்**
(புதிய நதியா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dr V. கணேசவேல்**

(சுந்தரவேல் வைத்தியசாலை, உரும்பராய்)

**தலைவர் / செயலாளர்**

(அளவெட்டி ப.நோ.கூ.சங்கம், ஊழியர் தொழிற்சங்கம்)

**ஐ. கணேசலிங்கம்**

(யாழ்ப்பாணம்)

**ஆ. ஜெயக்குமாரன்**

(கப்பூது, கரவெட்டி)

**உரிமையாளர்**

(அம்பிகா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**கு. சோதிராசா**

(தொல்புரம் மேற்கு, சுழிபுரம்)

**ஆனந்தராசா மணிமாறன்**

(அராலி மத்தி, அராலி)

**ந. கவிகரன்**

(சுழிபுரம்)

**T. மணிவண்ணன்**

(மிருசுவில்)

**மு. வைகுந்தநாதன்**

(இலங்கை வங்கி, அச்சுவேலி)

**S. விக்னேஸ்வரராசா**

(சுப்ராங் தொலைத்தொடர்பு சேவை, கதிரிப்பாய்)

**K. சுப்பிரமணியம்**

(கல்லூரி வீதி, இருபாலை)

**மு. இராசேந்திரா**

(தும்பளை, பருத்தித்துறை)

**பொ. வெங்கடேஸ்வரன்**

(நகரசபை, பருத்தித்துறை)

**ம. ஸ்ரீஸ்கந்தராசா**

(தேசிய சேமிப்பு வங்கி- சிறுப்பிட்டி, நீர்வேலி)

**இ. சரவணபவன்**

(அராலி மத்தி, வட்டுக்கோட்டை)

**சு. சிவனேசன்**

(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செல்லத்துரை தங்கராசா**
(அன்னை இல்லம், உரும்பராய்)
**பரமேஸ்வரன் தயாரூபன்**
(கல்வியங்காடு)
**ச. வடிவேலு**
(ஊரெழு, சுண்ணாகம்)
**திருமதி அகிலன் அருந்ததி**
(போதராமடம், துன்னாலை)
**க. பூலோகரட்ணம்**
(அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில்)
**S. கமலநாதன்**
(புத்தூர்)
**ச.சிவனேசன்**
(கேணியடி, திருநெல்வேலி)
**திருமதி அ. வினிதா**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**கு. நித்தியானந்தன்**
(பலாலிவீதி, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(அம்பிகாபதி பான்ஸ்கூட், யாழ்ப்பாணம்)
**கோ. யோகலிங்கம்**
(கிளை. முகாமையாளர், புத்தூர்)
**சி. நவரெத்தினம்**
(துவாரகை, கரணவாய்)
**திருமதி அ. குணநாயகம்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**த. தயாபரன்**
(கரவெட்டி)
**திருமதி தங்கராசா ஈஸ்வரி**
(கம்பர்மலை, வல்வெட்டித்துறை)
**கு. லோகேந்திரன்**
(மில் ஒழுங்கை, மல்லாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோ. கருணாகரன்**
(சுண்ணாகம்)
**உ. செந்தூரன்**
(பிரதான வீதி, அச்சுவேலி)
**வை. கமலநாதன்**
(வர்த்தக முகாமையாளர், மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம்)
**கு. சிவபாலராஜா**
(பொது சுகாதார பரிசோதகர், நல்லூர்)
**இ. கதிர்காமநாதன்**
(வங்களா ஒழுங்கை, மல்லாகம்)
**க. ஆனந்தராசா**
(நெல்லியடி, கரவெட்டி)
**இரா. அருட்செல்வம்**
(A.T.C. ரியூசன் சென்ரர், இணுவில்)
**சி. துரைராசா**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**செ. முருகதாஸ்**
(சாந்தை, பண்டத்தரிப்பு)
**திருமதி ப. பூமாவதி**
(முருகன் கோவில்வீதி, நெல்லியடி)
**வசந்தன் சிவஞானம்**
(அல்வாய் மேற்கு, திக்கம்)
**திருமதி திருத்தேவி ஏகாந்தன்**
(வல்வெட்டித்துறை)
**T. நாகராசா**
(நல்லூர் யாழ்ப்பாணம்)
**கா. தெட்சணாமூர்த்தி**
(பண்டத்தரிப்பு)
**திருமதி ப. இராஜேஸ்வரன்**
(கோண்டாவில்)
**பா. துவாரகன்**
(ஏழாலை தெற்கு, சுன்னாகம்)
**ம. பேரின்பநாயகி**
(நீர்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடு

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று"

-ஔவையார்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"

என்பது ஆன்றோர் வாக்கு.

"திருக்கோயிலில்லாத திருவிலூர்.... ஊரல்ல,
அடவி காடே"

என்கிறார் திருநாவுக்கரசு நாயனார்.

சைவநெறியில் நின்று வாழும் வாழ்க்கை சிறப்பாகவும் செழிப்பாகவும் அமைவதற்கு, ஆலய வழிபாடு இன்றியமையாதது.

மனித வாழ்க்கையின் குறிக்கோள்கள்; அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் அடைதல் ஆகும். அவற்றை அடைவதற்கு ஆலய வழிபாடு உறுதுணையாக உள்ளது.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" நாவலர் பெருமான் திருவாக்கு. இது, மனித வாழ்க்கைக் குறிக்கோள்களுள் அதியுயர்ந்தது; ஆன்மிகம் சார்ந்தது.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல், வைகலும்"
"வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல்"

அதன் வழி ஏனைய வாழ்க்கைக் குறிக்கோள்களையும் இம்மையில் அடையலாம். அவற்றிற்கெல்லாம் ஆலய வழிபாடு உந்துசக்தியாக விளங்குகின்றது. மேலும், இம்மையில் நல்லொழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்து செம்மையான, சீரான, அறநெறி வாழ்வை வாழ்வதற்கும் அதன் வழி இல்லறவாழ்வு, சமூகவாழ்வு, தேசிய வாழ்வு சிறப்பதற்கும்; இனங்களுக்கிடையிலான ஒற்றுமை, புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பன விருத்தியடைவதற்கும், ஆஸ்திகம் வளர்ச்சிபெறுவதற்கும் நாஸ்திகம் அஸ்தமிப்பதற்கும் வழி ஏற்படுகின்றது.

ஆஸ்திகம் பெருக்கிற்கு; ஊற்றுக்கண்ணாகவும் பரம்பல் மையமாகவும்; உந்து சக்தியாகவும் விளங்குவது ஆலயங்கள் ஆகும். ஆலயங்களின் உயிர்ப்புக்கும், திருவருள் பெருக்கிற்கும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நிகழ்த்தப்படும் புனருத்தாரண கும்பாபிஷேகம் குடமுழுக்கு இன்றியமையாததாகும்.

ஆலயம் என்பதன் பொருள் ஆன்மா இறைவனோடு இலயிக்கும் புனிதபூமி என்பதாகும். இலயித்தல் என்பதன் பொருள் மனம், வாக்கு, காயம் என்ற மூன்று திரிகரணங்களும் ஒன்றித்து, இறை சிந்தனையில் மட்டும் லயித்து இருத்தல் ஆகும். அதற்கு ஒரே வழி; இறைவனை உள்ளத்தில் இருத்தி எந்நேரமும் இறை சிந்தனையுடன் இருப்பதுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம்" திருமூலர் திருமந்திரம். உள்ளம் தான் மூலஸ்தானம் என்று அழைக்கப்படுகின்ற கருவறை ஆகும். ஊனுடம்பு ஆலயம் அதாவது "ஆ" என்றால் பசு; லயம் என்றால் பசு கட்டப்பட்டிருக்கும் இடம். பசு என்றால் சைவ சித்தாந்த பரிபாஷையில் ஆன்மா அல்லது உயிர் என்பதைக் குறிக்கும். பதி, பசு, பாசம் அல்லது இறை, உயிர், தளை என்னும் சொற்களாலும் அழைப்பர். அவற்றை முப் பொருள் என்று சைவநெறி கூறும்.

இனி, ஆலய தரிசன விதிமுறைகளைப் பார்க்கலாம். திருக்கோயிலுக்குச் சமீபத்திலுள்ள கேணி, குளம், கிணறு, நீர்த்தொட்டி முதலிய நீர்நிலைகள் ஒன்றில் கை, கால்களை அலம்பி அதன் பின்னரே, கோபுர வாயில் ஊடாக ஆலயத்தினுட் செல்ல வேண்டும். ஆண்கள் மேற்சட்டை, தலைப்பாகை, தொப்பி, பாதணிகள், போர்வை போன்றவற்றை அணிந்து கொண்டு கோபுரவாயிலைக் கடந்து, ஆலயத்தின் உட்செல்லல் ஆகாது. அவ்வாறு செய்தல் பாவகாரியம் ஆகும். குளிக்கப் போய் உடம்பில் சேறு பூசிக்கொள்ளுதல் ஆகாது அல்லவா!

முதலில் கோபுரத்தை இரண்டு கைகளையும் கூப்பித் தலைமீது வைத்து வணங்கி, அதன்பின் வாயில் காப்பாளராக இரு மருங்கிலும் நிற்கும் துவாரபாலகரிடம் உட்செல்வதற்கு உத்தரவு பெற்று; அதன்பின் இரு கரங்களையும் குவித்துச் சிரசிலே வைத்தபடி ஆலயத்தினுள் செல்ல வேண்டும். முதலில் பலிபீடத்திற்கு இப்பால் எழுந்தருளியுள்ள விநாயகருக்கு முன்னால் தோப்புக்கரணம் போட்டு அதன்பின் ஆண்கள் வீழ்ந்து, நிலத்தில் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும். மாறிச் செய்தல் ஆகாது. அது குற்றம் ஆகும்.

சிரசிலே இரு கைகளையும் குவித்து வைத்து வணங்குதல் திரியாங்க நமஸ்காரம் ஆகும். அவ் வணக்கமுறையை இரு பாலாரும் செய்யலாம். தரையில் வீழ்ந்து நமஸ்காரம் பண்ணுமிடத்து மேற்கேயாயினும், தெற்கேயாயினும் கால் நீட்ட வேண்டும். கிழக்கு, வடக்குத் திசைகளை நோக்கி கால்நீட்டக் கூடாது. ஆலயத்தினுள் தீபாராதனை நடைபெறும்போது ஏனையோருக்கு இடைஞ்சலாகவோ, இடையூறு ஆகவோ நிற்றல், நடமாடுதல், பேசுதல், அங்கும் இங்குமாக ஓடித்திரிதல், ஆடுதல், பலத்துச் சிரித்தல், பாடுதல் போன்ற பிறருக்கு இடையூறுகள் செய்யும் கவனக்கலைப்பான்களை அடியார்கள் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். கைத்தொலைபேசிகளை உட்பிரகாரத்திற்குள் எடுத்துச் செல்லுதலை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுதல் ஆன்மிகக் கடமையாகும். "தான் கெடினும், பிறருக்குக் கேடு நினைத்தல், மிகப்பெரிய பாவம் ஆகும்.

ஆலயத்தில் தீபம் ஏற்றுவதற்கேற்ப பசுநெய், தேங்காய் எண்ணை, இலுப்பெண்ணை, நல்லெண்ணை அவற்றுள் ஒன்றையாவது மாதத்திற்குக் குறைந்தபட்சம் ஓரிருமுறையாதல் வழங்குதல் வேண்டும். ஆலயத்தில் தீபம் ஏற்றுதல் நம் வாழ்க்கையில் ஒளியேற்றுவதாக அமையும். குத்துவிளக்கில் மகாலட்சுமி வாசம் செய்கிறாள் என்று தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. தாமரைத் தண்டிலிருந்து, அதனை வெட்டி அங்கு வெளிப்படும் நூலினால் திரித்து, அந்தத் திரியில் ஆலயத்திலோ, இல்லங்களிலோ விளக்கேற்றுதல் விசேட தினங்களில்

*வேதனைகளை ஜெயித்துப்பார் அதுவே ஒரு சாதனையாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கேற்றி, ஆலயங்களிலோ, இல்லங்களிலோ இறைவழிபாடு செய்து வந்தால், வாழ்வில் இலட்சுமிகரம் நிலைப்பது உறுதி.

"தீபத்தை ஏற்றி வைத்துத் திருக்குறளும் படிக்கலாம். அதேவேளை ஊரைக்கூட எரிக்கலாம் என்று ஓர் அருமையான பொருள் பொதிந்த திரைப்படப்பாடல் உள்ளது. "ஆக்கமும் கேடும் அதனால் வருவதால்" நெருப்பை ஆக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அழிவிற்கு அல்ல என்பதை நாம் கருத்திற்கொள்ளுதல் மனிதத்துவம் ஆகும்.

ஆலயத்தைச் சமீபித்ததும் முதலில் உயர்ந்த கோபுரங்கள் கண்ணிற்குத் தோன்றும். அவற்றைத் தரிசனம் செய்தல் வேண்டும். மனிதர்கள் உயர்ந்த எண்ணங்களையும் குறிக்கோள் களையும் கொண்டு உயர்ந்த மனிதர்களாக, மனிதநேயம், ஆன்மநேயம் பேணி, வாழும் முறையறிந்து வாழ்வாங்கு வையத்துள் வாழவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுவதாகத் தோன்றி எம்மை இறை தரிசனத்திற்கு அழைப்பதாக அவை தோன்றுகின்றன. மனிதநேயம் என்றால், எல்லா மனிதர்கள்மீதும் எவ்வித பேதமுமின்றி, அன்புசெய்தல். ஆன்மநேயம் என்பது எல்லா உயிர்கள்மீதும் (விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீரில் வாழ்வன) என்ற பேதமின்றி அன்பு செலுத்துதல்.

மனிதன் என்ற சொல்லைப் பகுத்துப் பார்த்தால், மன்+இதன்= மனிதன் என வரும். அதன் பொருள் மனத்தை இதம் ஆக, இனிமை தருவதாக எப்பொழுதும் வைத்திருப்பவன் மனிதன் ஆவான். அதிலிருந்து பிறக்கும் மற்றொரு கருத்து என்னவெனில் மனந்தூய்மை பேண மறுப்பவர், அதன்வழி, மொழி - பேச்சு, தூய்மைபேண மறப்பவர் மனிதன் என்ற சொல்லினால் அழைக்கப்படுவதற்கு தகுதியற்றவன்" ஆவர். எனவே, ஒவ்வொரு மனிதனும் தம்முடைய மனம், சொல் (மொழி), செயல் ஆகிய திரிகரணங்களையும் தூய்மையாக வைத்திருப்பவனே "மனிதன்" எனும் சொல்லால் அழைக்கப்படத் தகுதி பெற்றவன் ஆவான்.

சைவநெறி ஆலய வழிபாட்டிற்கு அதிமுக்கியத்துவம் வழங்கியுள்ளது. "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்கிறார் ஔவையார். "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது மற்றொரு முதுமொழி.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், ஆலய வழிபாட்டு முறைகள்பற்றி, "சைவவினாவிடை" என்னும் தமது நூலில் இரத்தினச் சுருக்கமாகக் கூறியுள்ளவற்றை சிந்தனைக்கும் செயற்பாட்டிற்குமாக இங்கு தரப்படுகின்றன.

சைவமக்கள் யாவரும் தினந்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று, சிரத்தையோடு விதிப்படி சைவ ஆசாரம் பேணி; நித்திய பூசையில் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தல் வேண்டும். விசேட தினங்களில் நடைபெறும் நைமித்தியப் பூசை, ஆராதனைகளிலும் சிரத்தை யோடு ஆலயம் சென்று, சுவாமி தரிசனம் செய்வதோடு திருத்தொண்டுகள் செய்வதிலும் ஈடுபாடுகொள்ளுதல் சமயக்கடன் ஆகும்.

ஆலய தரிசனம் செய்ய விரும்புவோர் ஸ்நானம் செய்து, உடல் தூய்மையராய்; தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்து, அநுட்டானம் மற்றும் இயமநியமங்களை முடித்துக்கொண்டு, ஆலயத்திற்குப் போதல் வேண்டும். ஆசௌசம் (துடக்கு) உள்ளவர்கள்; ஆசௌசம் நீங்கும்

*எதையும் தேவையில்லை என்று விட்டுவிடாதே. அனைத்தையும் கற்றுக்கொள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால எல்லை வரை ஆலயத்தினுள் பிரவேசிக்கக்கூடாது. மது அருந்திவிட்டும், போதைப் பொருள் உட்கொண்டுவிட்டும் ஆலயத்தினுட் பிரவேசித்தல் குற்றமாகும். அவ்வாறு செய்யின் குளிக்கப்போய் சேறு பூசிக்கொண்டமையை ஒக்கும். ஆலய தரிசனம் செய்வோர் அகப்புறத் தூய்மையைப் பேணவேண்டும் என்பது ஆலயதரிசன விதிகளுக்குள் முதன்மையானது.

ஆலயத்திற்குச் சுவாமி தரிசனம் செய்யப்போகும்போது வெறுங்கையோடு செல்லக் கூடாது. தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை மற்றும் பூக்கள், பத்திரங்கள் ஆகியவற்றை ஒரு தட்டத்தில் அல்லது வேறு பாத்திரத்தில், நீரில் கழுவியபின் வைத்து மேலே உயர்த்தப்பட்ட கையில் அப்பாத்திரத்தைத் தலைக்குமேலே ஏந்தியவண்ணம் கொண்டு செல்லுதல் வேண்டும். அதுவே உரியமுறையாகும். அருச்சனைப் பொருள்களை ஒருவர் அரைக்குக்கீழே தாங்கிச் செல்லுதல் குற்றமாகும். அவ்வாறு தினமும் பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றைக் கொண்டு செல்ல இயலாதவர் பூக்கள், பத்திரங்கள், அறுகம்புல், வில்வம் மற்றும் ஏதேனும் இலை களையாதல் கொண்டுசெல்லல் வேண்டும்.

"ஆலயம் தானும் அரன் எனத் தொழுக"

---

## திருவருள் புரிவாயே!

### *பல்லவி*

உள்ளத்திலே உனக்குக் கோவில் அமைத்தேன்! - தூய
ஒளி வீசும் தீபத்தை ஏற்றி வைத்தேன்! முருகா...

(உள்ளத்திலே)

### *அநுபல்லவி*

வள்ளி தெய்வானையுடன் நீயும் அமர்ந்தாய்! - நீல
வண்ண மயில்மீது வந்து காட்சி தருவாய்!

(உள்ளத்திலே)

### *சரணம்*

உன் திருப் புகழை நிதம் பாடி நிற்பேன்! - பக்தி
உணர்வினிலே ஆடி, உளம் மகிழ்வேன்!
இன்பங்கள் தரும் உன்னை இறைஞ்சிடுவேன்! - மாய
இருள் போக்கும் உனை நாளும் போற்றிடுவேன்.

(உள்ளத்திலே)

வள்ளலாயே இருந்து அருள் புரிவாய்! - உன்னை
வணங்கிடும் எந்தன் குறைகளைத் தீர்த்திடுவாய்!
தெள்ளுதமிழ்த் தெய்வமாய் இருப்பாய் நீயே! - என்
தேவைகளை நிறைவேற்றித் திருவருள் புரிவாயே!

(உள்ளத்திலே)

*-கி. குலசேகரன்-*

***நிம்மதியான வாழ்க்கை வாழ ஆசையில்லாத மனம் வேண்டும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறாமை

– திரு மு. செல்லத்தம்பி அவர்கள் –

இல்லாதது உருவானது இயற்கையின் நியதியானது இறைமையின் வெளிப்பாடானதும் கூடவே காலவரை என்று ஒன்றும் கணிக்கமுடியாத நெடுங்கால நகர்வின் பின்னே உலகமாக உருவெடுத்து பரிணாம மேம்பாட்டினால் பல்கிப்பெருகி எண்ணரிய உயிரினங்களால் ஓங்குவித்து நிற்பதே இந்த உலகு. இந்த உயிர் இனங்களின் மிகவும் மகிமை வாய்ந்த மனித வர்க்கமானது சிறப்பான பெறுபேறுகளை கொண்டனவாக விளங்கிவர உறுதிவாய்ந்த உள்ளடக்கங்கள் ஏதும் முன்கூட்டியே கொண்டுள்ளதா என்றால் இல்லை என்று கொள்ளமுடியுமா. அப்படிக் கொள்ள முடிந்தால் இல்லாத ஒன்றை உருவாக்கிய இறைவனின் நிலைப்பாடுதான் என்ன அவன் விட்டுவிடுவானா.

இறைமையின் இயல்பினால் அந்த இயல்பின் தாபத்தினால் மக்கள் பல்வேறு வகைகளில் பல்வேறு துறைகளில் பல்வேறு பாவனைகளில் முன்னேற்றம் கொண்டு வாழ்வு பெற ஒத்தாசைகள் கிடைக்கத்தான் பெற்றன.

ஏற்றமிகு சமுதாயங்கள் எங்கெங்கும் உருவாகி அல்லலுற வையத்தின் ஆசிதனை உள்வாங்கி நீக்கமற வாழ்வில் நிம்மதி தழைத்தோங்கி உயர்வு தாழ்வு இன்றி ஒற்றுமையாய் வாழ்ந்துவர உறுதியான வழிமுறைகள் வாய்க்கத்தான் பெற்றன. இப்படி வாழ்ந்துவந்த போதிலும் காலங்கள் செல்லச்செல்ல கனவுலகில் கால்கள் பதிக்கப் பதிக்க வாய்க்கப்பெற்ற வாய்ப்புக்கள் எல்லாம் வழிமாறி திரும்பல் ஆயின. உற்ற சம வாழ்வின் உறுதிநிலை வீழ்ச்சி அடைந்து உயர்வு தாழ்வு என்ற பேதங்கள் உருவாகி போட்டி, பொறாமை, பேராசை, வஞ்சனை முதலிய இழிவான பழக்கவழங்கங்களில் மூழ்கி தான்தோன்றித்தனமான வாழ்க்கை நிலையில் தலைத்தோன்றி நின்றது.

போட்டி என்பது மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கு முன்மாதிரியாக இருந்தபோதிலும் பொறாமை என்பது முழுக்க முழுக்க முரனானது வேண்டத்தகாதது. விரட்டியடிக்க வேண்டியது. அடுத்தவனின் முன்னேற்றம் கண்டு அதை ஜீரணிக்க முடியாமல் அனல்போல் கொதிக்கும் தன்மை கொண்ட நெஞ்சத்தை உருவாக்குவது. அதாவது அயல்வான் ஆறுமாதம் தண்ணீர் குடிக்க முடியாதநிலை என்று அனைவராலும் பேசப்படும் நிலை. இந்த நிலையில் வாழ்ந்து வரவா இறைவன் மனிதனைப் படைத்தான். நாம் எல்லாம் உண்மையே பேசி நன்மையே செய்து உத்தமராய் வாழ்வு பெற்று இம்மைக்கும் மறுமைக்கும் உயர்ந்த வழிமுறைகள் தேடவே ஆண்டவன் இவ் உலகிற்கு எம்மை அனுப்பி வைத்தான். ஆண்டவன் அறிய நெஞ்சில் சிறு சிறு வஞ்சம்கூட கிடைக்கவே கிடைக்காது. அடுத்தவன் முன்னேறுவதை பொறுத்துக்கொள்ள முடியாத ஒருவனை ஆண்டவன் ஒருபோதும் விரும்பவேமாட்டான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயமே. இந்த நிலைப்பாட்டில் உள்ளவர்கள் தம்மைப்பற்றி தாமே புரிந்துகொள்ளும் விதம் தான் எப்படி அதாவது தாம் ஆண்டவனால் கைவிடப்பட்டவர்

*நம்மீது நம்பிக்கை இருக்கும்வரை வாழ்க்கை நம்வசம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதே. இந்த மனிதனைக் காணவா இல்லாத உலகத்தை உருவாக்கினான் இறைவன். சுயநலம் கொண்ட ஒருவன் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் நலம்வேண்டி பலவிதமான பாதகச் செயலில் ஈடுபடுகின்றான். மற்றவர்களுக்கு நன்மையோ தீமையோ அதை அவன் பொருட்படுத்துவதில்லை. அது அவனுக்கு தேவையும் இல்லை. இதற்குப் பெயர் சுயநலம் ஆனால் தன்நலத்திற்கு முன்னதான அடுத்தவன் முன்னேற்றம் கொள்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாமல் மனம் கொதித்து அவனை அழிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட மனிதனும் இவ்வுலகில் இருக்கத்தான் செய்கிறான். இதற்குப் பெயர்தான் பொறாமை.

தன்னை மிஞ்சி ஒருவன் உயர்ந்துவிட்டான் என்ற காரணத்தால் ஒருவன் அவனை வஞ்சிக்கின்றான் வஞ்சிப்பவன் ஒருவன் ஆனால் வஞ்சிக்கப்படுபவனோ ஒருவனாக இருந்தபோதும் அவன் ஒருவன் அல்ல "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க என்ற சொற்பதத்திற்கு சார்பாக" எத்தனையோ பொறுப்புக்களிற்கு இலக்கானவன் அளவற்ற மக்களிற்கு அந்தரங்கமாய் திகழும் அவனும் அவனைப் போன்றவர்களும் ஆண்டவனுக்கு அடுத்தபடியான பட்டியலில் பொறிக்கப்படவேண்டியவர்கள். அப்படிப்பட்ட உத்தமர்களை அழித்தொழிக்க முயலும் கொடுமை யான பொறாமைபோல் வேறொரு சக்தி உலகில் இருக்கமுடியாது. இதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி என்றும் மக்களின் மனதில் நிற்பவர் யார் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி திரைப்படம் ஒன்றில் பிரசன்னம் ஆகி அதற்குத்தானே முன் உதாரணமாகத் திகழ்ந்து அனைத்து மக்களின் மனதில் குடிகொண்டு இந்தியாவில் கொடி கட்டிப்பறந்தவரும் கொடை வள்ளளுமாகிய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் மீது பொறாமை மேற்கொண்ட இன்னொரு சக நடிகன் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை உலகம் அறியும். இதனால் கொந்தளித்து குமுறிய தமிழகம் ஈற்றில் அவர் உயிர் பிரியப்போவதாக எண்ணி "உள்ளமதில் உள்ளவரை அள்ளித்தரும் நல்லவரை விண் உலகம் வாவென்றால் மண் உலகம் என்ன ஆகும் ஆண்டவனே உன் பாதங்களை நான் கண்ணீரில் நீராட்டினேன். அந்த ஓர் உயிரை நீ வாழ வைக்க இன்று கையேந்தினேன் முருகையா" என்று பிரார்த்தனையிட்டு கதறி அழுதது.

பிந்திய காலத்தில் இறந்த இந்த மாமனிதனின் இறுதி ஊர்வலத்திலும் மரணச் சடங்குகளிலும் கலந்துகொண்ட இலட்சக்கணக்கான மக்கள் தொகைபோல் வேறெந்த நபர் ஒருவரின் சடங்குகளில் கலந்துகொண்டதாக இதுவரை சரித்திரமில்லை. இத்தகைய உத்தமர்களை குறிவைக்கும் பொறாமை என்ற கொடிய சக்திபோல் உலகில் வேறொன்றும் இருக்கமுடியாது.

---

நீங்கள் செய்யும் தவறுகளை முழு மனதுடன் ஒப்புக்கொள்வதுதான் உங்களது உள்ளத் தூய்மையை எடுத்துக்காட்டும். உங்களை நீங்களே பெருமைப்படுத்துவது ஆணவம். மற்றவர்கள் உங்களைப் பெருமைப்படுத்துவதே கௌரவம். உங்களது குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களை வரவேற்கக் கற்றுக்கொள்ளுங்கள். எந்த அளவுக்கு இதை கடைப்பிடிக் கிறீர்களோ அந்த அளவுக்கு வேகமாக முன்னேறுவீர்கள்.

*எப்போதும் எச்சந்தர்ப்பத்திலும் தன்னம்பிக்கையை மட்டும் இழக்கக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. **ஜெயபாலன்** அவர்கள் – (தொடர்ச்சி...

பரம்பொருளின் தன்மையைப் பாடுகிறார் திருமூலர். நாஸ்திகர்களுக்கு ஈஸ்வரன் இலன். ஆஸ்திகர்களுக்கு எவன் உளன். வழிபடுகிறவனுடைய நெஞ்சம் உருகினால் அவனைக் காணமுடியும்.

இல்லனும் அல்லன், உளனல்லனெம் இறை

(எம் இறை- எம்பெருமான் இல்லனும் அல்லன்- நாம் காணாவிடினும், அல்லது இல்லை என்று மறுத்துச் சொன்னாலும், அவன் இல்லாதவனாக மாட்டான்- உளன் அல்லன்- பக்தியும் ஞானமும் இல்லாதவர்களுக்கு அவன் இல்லாதவனே ஆவான்)

ஊன் என்று நாம் சொல்லும்படியான தரிசனம் பெறவில்லை. ஆனபடியால் “ஊன்” அல்லன் ஆனால், நாம் காணாவிடினும் அவன் இல்லாதவனாக மாட்டான். பரம்பொருளின் உண்மை மாறாது. ஆனபடியால் இலன் அல்லன்!

அடுத்து தரிசனம் பெறும் மார்க்கம் பற்றி கூறுகிறார்.

கல்லது நெஞ்சம் பிளந்திடும் காட்சியன்,

(கல்லது நெஞ்சம்- கல்லால் ஆனது போன்ற நம்முடைய நெஞ்சத்தை பிளந்திடும் சாட்சியன்- பிளந்திட்டால் அங்கே தோன்றக் கூடியவன்.

அவனுடைய அருள் இருந்தால் மறைக்கின்ற நம்முடைய கல்நெஞ்சத்தையும் பிளந்து தரிசனம் தருவான். பயன் என்பதை அழுத்தமாக விளக்குவதற்காக “பிளந்திடும்” சாட்சியன் என்கிறார்.

தொல்லையன், தூயன், துளக்கு, இலன், தூய்மணி

(தொல்லையன்- ஆதிமூலம் பரம்பொருள் தூயன்- பாசமலங்கள் இல்லாதவன். துளக்கிலன்- மாறுபாடு இல்லாமல் எப்போதும் நிலையாக நிற்கும் தன்மையன். அச்சுதன்- தூயமேனி- மாசில்லாத இரத்தினமணி)

சொல்லருஞ் சோதி, தொடர்ந்துநின் றானே.

(சொல்லரும் சோதி- வர்ணித்து சொல்லமுடியாத ஜோதி வடிவானவன் தொடர்ந்து நின்றானே- அருள் தருவதற்காக உயிர்களை விடாமல் தொடர்ந்து நிற்கிறான்.)

இல்லனும் எல்லன், உளனல்லனெம் இறை
கல்லது நெஞ்சம் பிளந்திடும் காட்சியன்,
தொல்லையன், தூயன், துளக்கு இலன், தூய்மணி
சொல்லருஞ் சோதி, தொடர்ந்துநின் றானே.

அளவில்லாத ஆற்றலும், குறைவில்லாத நிறைவும் கொண்ட எம்பெருமான் யாவர்க்கும் மேற்பட்ட பெருமையை உடையவர் என்றாலும், இந்த அற்பமான மனித சரீரத்துக்குள்ளே கலந்து நிற்கிறான் என்பதை பாடுகிறார் திருமூலர்.

*மனம், பணம் அதிகம் நேசித்தால் நிம்மதி போய்விடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனோர் பெருமையன், ஆகிலும் எம்இறை

(ஏனோர் பெருமையன் ஆகிலும்- எப்படிப்பட்ட பெரியோருக்கும் பெரியவனாகி நிற்கிறான் என்றாலும்)

ஊனே சிறுமையுள் உட்கலந்து அங்குளன்

(ஊனே சிறுமையுள்- சிறுமையாகிய ஊனுக்குள் அதாவது இந்த அற்ப உடம்பிலும் உட்கலந்து- உட்புகுந்து கொண்டு அங்குளன்- உள்ளத்திற்குள் நிற்கிறான்.)

வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்

(மாதேவன்- மகாதேவன்; தனிப்பெருங் கடவுள் வானோர்- தேவர்கள் அறியும் அளவல்லன்- அறிவினால் அறிதியிட்டு விடக்கூடியவன் அல்லன்)

தானே அறியும் தவத்தின் அளவே

(தானே- அவரவர் தனது முயற்சியினாலே)

அவரவர் தங்கள் தங்கள் தவத்தின் அளவுக்கு தக்கவாறு அவனை அறியலாகும். தவத்தின் அளவே அவனுடைய தரிசனம் ஆகும்.

ஏனோர் பெருமையன், ஆகிலும் எம்இறை
ஊனே சிறுமையுள் உட்கலந்து அங்குளன்
வானோர் அறியும் அளவல்லன் மாதேவன்
தானே அறியும் தவத்தின் அளவே.

இறைவனை பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று மூன்று வடிவங்களாக பகுத்துப் பாடு கின்ற எம்முடைய சமய நூல்கள். இந்த மூன்று நிலையிலும் நிற்கின்ற ஈசன் ஒருவனே எனப் பாடுகிறார் தவயோகி.

நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி

(மால்- திருமால், விஷ்ணு நான்முகன் - பிரம்மா)

தான் ஒருவனே திருமாலாகவும் பிரம்மாவாகவும் நிற்கிறான் சிவபெருமான்.

நின்றனன் தானிலங் கீழொடு மேலென

நிலத்திலும் நிலத்திற்குக் கீழேயும் மேல் வானத்திலும் மூன்று உலகத்திலும் அவனே வியாபித்து நிற்கிறான்.

நின்றனன் தானெடு மால்வரை ஏழ்கடல்

(நெடுமால் வரை- நெடிய மேருமலை ஏழ்கடல்- ஏழ்கடல்கள் என்று சொல்கின்ற நீர்ப்பரப்பு முழுவதுமாக)

எங்குமாய், எல்லாமாய் பரந்து நிற்கின்றான் இறைவன் என்பதை நிலத்திலும், மேலுலகிலும், கீழுலகிலும், உலகப்பரப்பு அவ்வளவிலும் வியாபித்து நிற்கிறான் என்று தவமுனி பாடுகிறார். இப்படிப்பட்ட சர்வவியாபியான இறைவன் பக்தர்களுக்கு எப்படி எப்படி இருக்கிறான்?

நின்றனன் தானே வளங்கனி யாயே.

(வளங்கனி- வளமான நல்ல தீங்கனி)

எங்குமாய் நிற்கின்ற பரம்பொருள் பக்தர்களுக்கு அருட்கனியாய் வந்து காட்சி அளிக்கிறான்.

*சேமிப்பு இல்லையென்றால் உழைப்பும் வீணே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றனன் மாலொடு நான்முகன் தானாகி
நின்றனன் தானிலங் கீழொடு மேலென
நின்றனன் தானொடு மால்வரை ஏழ்கடல்
நின்றனன் தானே வளங்கனி யாயே.

இறைவனுடைய சர்வவியாபகத்தை மேலும் பாடுகிறார் தவமுனி

உள்நின்று ஒளிரும் உலவாப் பிராணனும்

(உள்நின்று- இந்த உடம்பினுள் இருந்து ஒளிரும்- ஒளி வீசுகின்ற உலவாப் பிராணனும் அழிவற்ற உயிரும்)

இந்த உடம்பினுள் அழிவற்ற நித்தியப் பொருளாக நிற்கின்ற ஆன்மாவும்

விண்நின்று இயங்கும் விரிகதிர்ச் செல்வனும்

(விண்ணின்று- வானத்தில் நின்று இயங்கு- ஒளி வீசுகின்ற விரிகதிர் செல்வனும்- விரிந்து பாயும் கதிர்களையுடைய சூரியனும்)

வானில் நின்று கதிர் வீசுகின்ற சூரியனும்.

மண்நின்று இயங்கியும் வாயுவுமாய் நிற்கும்

(மண்ணின்று இயங்கும்- மண்ணுலகில் பரந்து வீசுகின்ற வாயுவுமாய் நிற்கும்- காற்றாகவும் நிற்கிறான் ஈசன்)

இந்த உடம்பினுள் நிற்கின்ற ஆன்மாவும் விண்ணிலே கதிர் வீசுகின்ற சூரியனும் மண்ணுலகம் முழுவதும் பரந்து வீசுகின்ற காற்றும், எல்லாம் இறைவனே என்று பாடுகின்ற தவமுனி பாடலை நிறைவு செய்யும்போது நுட்பமான உண்மைகளை காட்டுகிறார்.

கண்நின்று இலங்குங் கருத்தவன் தானே.

(கண்ணின்று- புலன்களில் நின்று கண் என்பதில் எல்லா புலன்களும் அடங்கும். இயங்கும் கருத்து- புலன்களின் வழியே நாம் அடையும் உணர்வு.

புலன்களின் வழியே நாம் அடையும் உணர்வு இறைவனின் சக்தியேயாகும். கண்ணுக்கு கண்ணாகவும் காதுக்கு காதாகவும் அப்படியே எல்லாப் புலன்களுக்கும் உள்நின்ற புலனாக இருப்பது பரம்பொருளே.

உள்நின்று ஒளிரும் உலவாப் பிராணனும்
விண்நின்று இயங்கும் விரிகதிர்ச் செல்வனும்
மண்நின்று இயங்கியும் வாயுவுமாய் நிற்கும்,
கண்நின்று இலங்குங் கருத்தவன் தானே.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| யூலை | 25 | ஆடி 09 | செவ்வாய் | தவத்திரு முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகள் |
| யூலை | 26 | ஆடி 10 | புதன் | சுந்தரமூர்த்தி நாயனார் |
| ஆகஸ்ட் | 01 | ஆடி 16 | செவ்வாய் | பட்டினத்தடிகள் |
| ஆகஸ்ட் | 26 | ஆவ 09 | சனி | குங்குலியக்கலய நாயனார் |

கற்றுத் தெளிவது கல்வி, அறிந்து தெளிவது அறிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானத்தை விஞ்சியது மெஞ்ஞானம்

– திரு பு. கதிரித்தம்பி அவர்கள் –

உலகத்தை வாழ வைப்பவன் மனிதன். அரிதற்கரிய பிறவியையுடைய மனிதனைப் படைத்தவன் இறைவன். இறைவன் மனிதனுக்கு விஞ்ஞான அறிவையும் மெஞ்ஞான அறிவையும் கொடுத்துள்ளான். விஞ்ஞானத்தால் அறிய முடியாததை மெஞ்ஞானம் உணர்த்தி நிற்கின்றது. எனவே விஞ்ஞானத்திலும் மெஞ்ஞானம் விஞ்சியது என்று கூறுவது சாலப் பொருத்தமுடைய தாகும்.

ஆதிகால மனிதன் விஞ்ஞான அறிவு இன்றி மெஞ்ஞானத்தை நம்பி வாழ்ந்தான். மெஞ்ஞானத்தை உணர்த்துகின்ற இறைவன் வாக்கை நம்பிப் பணிபுரிந்தான். எக்காரியம் செய்யினும் பிள்ளையார் சுழிபோட்டு கருமஞ்செய்ய, பிள்ளையார் செவ்வனே நிறைவு செய்வாரென நம்பினான். பிள்ளையாரும் தன்னை நம்பி கருமஞ் செய்பவர்களுக்கு அருளை அள்ளி வழங்கினார். தெய்வீக நெறியில் நின்று வாழ்ந்த திருஞானசம்பந்தர் சமணருடன் வாதிட்டு, இறைவன் அருளிய பாடலை ஏட்டில் எழுதி, தீயிலிட்டு, அது எரியாது இருந்ததையும், பதிகத்தை ஏட்டில் எழுதி ஓடும் நீரில் போட எதிரேறிச் சென்றதையும் சமணர் கண்டு வியந் தனர். அதுபோல் அப்பர் ஏழுநாள் ஊண், நீர் இன்றிச் சுண்ணாம்பறையில் அடைபட்டார். ஏழுநாள் கழித்ததும் சமணர் திறந்து பார்த்தபோது முன்னிருந்ததை விடப் பூரிப்புடையவராகக் காணப்பட்டார். அதுமட்டுமன்றி சமணர் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோறு உண்டு இறவாதிருந் ததையும், கல்லில் கட்டி கடலில் போட்டு, தெப்பமாக மிதந்து சென்றதையும் மெஞ்ஞானம் உணர்த்தி நிற்கின்றது. இதுபோல் சுந்தரமூர்த்தி நாயனார் முதலை விழுங்கிய பாலனை மீட்டுக்கொடுத்ததையும் மெஞ்ஞானம் விஞ்ஞானத்திலும் விஞ்சியதென்பதை பறைசாற்றி நிற்கின்றது.

விஞ்ஞானம் இப்பொழுது எங்கும், எவையிலும் செறிந்து படர்ந்திருக்கின்றது. தொலைபேசியில் விஞ்ஞானம் செறிந்து, எவ்வளவு தொலைவில் இருந்தாலும் நொடிப்பொழுதில் அறியவைக்கின்றது. எனவே உலகம் விஞ்ஞான அறிவால் கைக்குள் அடங்கிவிட்டது. விஞ்ஞான வளர்ச்சியால், கணக்கிடும் (கூட்டல், கழித்தல், பெருக்கல்) கருவிகள், ஏக வளர்ச்சியைப் பெற்று பல்கிப் பெருகியிருக்கின்றன. இன்னும் எத்தனையோ, நிழற்படம் எடுக்கும் கருவிகள், கண்டம் விட்டுப் பாயும் ஏவுகணைகள் அதிவேகமாகப் பறக்கும் வானவூர்திகள் என்பன விஞ்ஞான அதிவளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன. விஞ்ஞானி சந்திரனில் காலடி வைத்தான். செவ்வாய் கோளையும் கண்டுபிடித்து, அதில் மனிதன் வாழ முடியுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கின்றான். இவ்வளவெல்லாம் திறமைபடைத்த விஞ்ஞானியால் உடம்பிலிருந்து பிரிந்த உயிரை திரும்பவும் உடலில் செலுத்தமுடியாது திண்டாடுகின்றான். ஆனால் அருணகிரிநாதர், அரசனுக்கு பாரிசாதம் மலர் பறிக்க தனது உடலை நிலத்தில் வைத்து, இறந்து கிடந்த கிளியின் உடலில், தனது உயிரைப்புகுத்தி, பறந்து சென்று

*நினைப்பது சரியாக நினைத்தால் நடப்பதும் சரியாகவே நடக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்பறித்து வைத்ததையும் கந்தபுராணம் எடுத்து இயம்புகின்றது. இன்னும் சுப்பிரமணியம் என்னும் யோகி, பசுக்களின் கதறுதலைக் கண்டு, தனது உயிரைத் திருமூலன் உடலில் புகுத்தி பசுக்களை ஓட்டிச் சென்றதையும் மெஞ்ஞானத்தின் திறனை உயர்த்தி நிற்கின்றன.

விஞ்ஞானம் மருத்துவச் சேவையில் அளப்பரிய கருவிகளைக் கண்டு பிடித்து, அறுவைச் சிகிச்சையின்றி குணப்படுத்த வழிசெய்யப்படுகின்றது. இன்னும் எத்தனை நோய்கள் குணப்படுத்தமுடியாமையினால், இறைவனை வேண்டுங்கள் என நோயாளியிடம் வைத்தியர் கூறுவதை அறிகின்றோம். எனவே வைத்தியரும் விஞ்ஞானத்திலும் மெஞ்ஞானம் விஞ்சியதென்பதை ஒப்புக்கொள்ளுகின்றார்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியையும் மெஞ்ஞானத்தின் எழுச்சியையும், அறியாத சிலர் நாத்திகனாகவும் குடிகாரர்களாகவும் விளங்கி நாட்டைச் சீரழிக்கின்றனர். மனிதப் பிறவியின் சிறப்பையும் உணராது மாக்களாய் வாழ்கின்றனர். அறியாமையைப் போக்கி அவர்களை நல்வழிப்படுத்த, நல்ல திருத்தலமாக விளங்குவது தொண்டைமானாற்று செல்வச்சந்நிதியான் ஆலயம். அந்த முருகன் செல்வச்சந்நிதியில்

"அருவமுமுருவுமாகி அனாதியாய்ப் பலவா யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்குதித்தன னுலகமுய்ய.

உங்களைக் காக்க வந்து உதித்த செல்வச்சந்நிதி முருகன் எந்நிதியும் தருவான். உங்கள் கால்கள் செல்வச்சந்நிதியான் ஆலய மண்ணில் பதியப்படும். வினைகள் பறந்து ஓடும். மெஞ்ஞானம் தோன்றும். அதுமட்டுமன்றி நோய்கள் குணமடைய ஆற்றங்கரையான் ஆற்றில் நீராடுங்கள். சந்நிதியான் ஆலய விபூதியை நெற்றியிலும், மார்பிலும் உடம்பெங்கும் பூசுங்கள். பாண்டிய மன்னனுக்கு வெப்புநோய் நீங்கியதுபோல் உங்கள் நோயும் நீங்கிவிடும். இது திண்ணம்.

**முருகனின் புகழ் கூறும் நூல்கள் இனிதே**

முருகனிடம் ஒன்றி விட்டாலே போதும்
முழுஉலகும் பாதம்பணியும் அருணகிரி போலாகும்
பெருமை பேசும் நிலையை விட்டுவிடு நீயும்
பிழை பல விட்ட அருணகிரியின் நிலையைப் பேணும்
அருமை அருமை திருப்புகழின் பெருமை மிக அருமை
கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி, மயில், சேவல், வேல் விருத்தம்
கருணை பொழியும் கந்தசஷ்டி கவசம் ஆறும்
திருமுருகாற்றுப்படையோடு முருகன் புகழைக் கேளும்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*நேசிப்பதைவிட சுகமானது நேசிக்கப்படுவது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த சாகரம்

*(தொடர்ச்சி....*

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்** அவர்கள் –

## கந்தசஷ்டி

தேவர்கள் சிவபெருமானைச் சென்றடைந்து, "எம்பிரானே, சூரபதுமனால் பெரும் துயருறுகிறோம். செய்வதறியாது வாடி வருந்துகிறோம். நாம்படும் துயர்நீங்க, வேதமும் கடந்து நின்ற விமலனே, குமரன் ஒருவனை நீதரல் வேண்டும்" என்று வேண்டுகிறார்கள்.

"வேதமும் கடந்து நின்ற விமல ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின் பால் நின்னையே நிகர்க்க என்றார்".

"கொடிய அசுரனைக் கொன்றொழிக்கக் குமரனைத் தருகின்றோம்" என்று திருவாய் மலர்ந்தருளுகின்றார் இறைவன். ஐந்து முகத்தோடு அதோமுகமும் சேர்த்து ஆறுமுகங்களிலும் அமைந்த நெற்றிக்கண் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நெருப்புப்பொறியைத் தோற்றுவிக்கின்றார். வாயுதேவனும், அக்கினிதேவனும் அவற்றைக் கங்கையிலே விடுகின்றார்கள். கங்கை அவற்றைச் சரவணப் பொய்கையிலே கொண்டு சேர்க்கின்றாள்.

நெற்றிக் கண்ணனின் அருளாலே ஆறு பொறிகள் தோன்றினவே
வாயுவும் தேயுவும் தாங்காமல் சரவணப் பொய்கையில் சேர்த்தனரே
ஆறு தாமரை மலர்களிலே ஆறுகுழந்தைகள் உதித்தனவே
ஆறு குழந்தைகள் அழுதிடவே அமரர் கண்டு களித்தனரே
ஐயன் திருப்புகழ் பாடினரே
கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி கண்மணி உன்னைக் காத்தனரே
தாய்மார் அறுவர் தாலாட்டில் செல்வக் குழந்தைகள் மகிழ்ந்தனவே
அன்புடன் அபிராமி அரவணைக்க அறுவர் ஓர் அம்சமாய் வந்தனரே.
பாலமுருகன் லீலைகளைப் பார்த்தவர் தம்மை மறந்தனரே
சூரபத்மனைச் சங்கரிக்கத் திருவவதாரம் செய்தானே
அசுரரை அழிக்க வந்தானே அன்பரைக் காத்திட வந்தானே
ஒருதிரு முருகன் வந்தானே உலகம் உய்ய உதித்தனனே.

அந்த ஆறு உருவங்களையும் அன்னை உமாதேவியார் அன்புடன் அணைத்து எடுக்க ஆறுமுகமும் பன்னிருகரமும் கொண்டு ஆறுமுகப் பெருமான் தோன்றினார். ஆறு உருவமும் ஒன்றாகவே கந்தன் என்று பெயர் பெறுகிறான் பெரும் பெயர் முருகன்! முருகவேள் பெருமைகளையெல்லாம் உமையம்மைக்கு ஈசன் கூறுகின்றார். சரவணப் பொய்கையில் நம் குமரனைக் கங்கை சேர்த்தமையினால் காங்கேயன் எனப் பெயர் பெறுகிறான். சரவணப் பொய்கையினால் குமரனாய் வளர்ந்தமையினால் சரவணபவன். கார்த்திகைப் பெண்கள் பாலமுதம் ஊட்டியதால் கார்த்திகேயன். ஆறுதிருமுகங்களையும் நீ ஒன்றாகத் திரட்டிச் சேர்த்தமையால் அவன்கந்தன். தாரகப்பிரம்மமாய் உள்ள ஆறெழுத்தும் முருகனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறெழுத்து மந்திரங்கள். அவன் நமது சக்தி ஆதலால் அவனுக்கும் நமக்கும் பேதமில்லை. வழிபடுவோர்க்கு ஞானமும், செல்வமும் சிறப்பும், வீடும் அருளவல்லவன். மைந்தன் சிறப்புக்களைக் கேட்டு மனமகிழ்கிறாள் உமையவள். பாலமுருகன் திருவிளையாடல்கள் தொடர்கின்றன. வானவர்கள் ஈசனிடம் சூரனின் கொடுமைகளைச் சொல்லி வருந்துகிறார்கள்.

"முருகா! சூரனையும், அவன் குலத்தையும் வேறறக் களைந்து தேவலோக ஆட்சியை மீண்டும் இந்திரனுக்குக் கொடுத்து இங்கு வந்து சேர்வாயாக". என்று வாழ்த்தி அன்னை ஒப்பற்ற வேலாயுதத்தைக் கையில் கொடுத்து வழி அனுப்புகிறார்கள். முருகப்பெருமான் திருச்செந்தூரிலே எழுந்தருளி வீரவாகுதேவரை சூரனிடம் சமாதானத் தூது அனுப்பினார். ஆணவம் கொண்ட சூரன் இணங்கவில்லை. போர் தொடங்குகிறது. சூரன் வரம் பெற்றவீரன். முருகனைப் பால் மணம் மாறாத பச்சிளங்குழந்தை என்றே மதிக்கிறான். முருகன் சிறிதளவு ஞான உணர்ச்சியைக் கொடுக்கிறார். முருகன் மேல் சூரனுக்கு அன்பு உண்டாகின்றது. ஆனால் மானம் தடுக்கிறது. கடைசியில் முருகப்பெருமானுடைய திருக்கைவேல் சூரனைச் சங்கரித்தது. சுந்தரச்சுடர் வேல் மூர்த்தி சூரனுக்கு அருள்புரிந்து, அவனைச் சேவலும், மயிலுமாக தன்னை சுமக்கும்படி அருள் செய்கிறார். சேவல் முருகனுடைய கொடியிலே நின்று கூவுகிறது. பரம்பொருளே அதர்மத்தை அழிப்பதற்காக நேரிலே வருகிறானென்றால் சூரனின் பெருமையைச் சொல்லவும் வேண்டுமா?

சுப்பிரமணியக் கடவுளுக்குரிய விரதங்களிலே கந்தசஷ்டி விரதம் முதன்மையானது. சுக்கிரவார வெள்ளிக்கிழமை விரதம் கந்தசுவாமியினுடைய விரதமாகும். அதனை அனுட்டிப்பவர்கள் நினைத்ததெல்லாம் பெறுவர். நாரதமுனிவருக்கு விநாயகப் பெருமான் முருகனை வழிபட்டு கார்த்திகை நட்சத்திர விரதத்தை பன்னிரண்டு வருடகாலம் பக்தி சிரத்தையோடு அனுட்டித்தால் நீ நினைத்ததெல்லாம் பெறுவாய் எனக் கூறுகிறார். நாரத முனிவரும் பூவுலகுக்கு வந்து பரணிநட்சத்திரத்தில் ஒருபொழுது உணவு உண்டு, கார்த்திகை நட்சத்திரத்தில் ஸ்நானம் செய்து, வெள்ளை வஸ்திரம் தரித்து, நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்து, ஐம்புலன்களை அடக்கி ஆசாரியாரைத் தியானித்து சுப்பிரமணியக் கடவுளைப் பூசிக்கிறார். அவருடைய புராணத்தை வாசிக்கிறார். தருப்ப சயனத்திலே படுத்து அன்றிரவு முழுவதும் நித்திரையின்றி முருகக்கடவுளையே தியானித்த வண்ணம் இருந்து அடுத்தநாள் காலையிலே முனிவர்களோடு பாறணை செய்து பகற்பொழுது உறங்காது இவ்வாறு பன்னிரண்டு வருடகாலம் முறைப்படி கார்த்திகை விரதத்தை நோற்று ஏழு முனிவர்களுக்கும் மேலான பதவியையும் சிறப்பையும் பெற்றார்.

கந்தசஷ்டி விரதம் துலாமாசத்துச் சுக்ல பட்சப் பிரதமை முதலாக ஆறுநாளும் காலையில் ஸ்நானம் செய்து சுத்த வஸ்திரம் இரண்டு தரித்து சந்தியாவந்தனம் முடித்துக் கிரௌஞ்ச மலையையும் சூரபன்மனையும் சங்கரித்த வேலாயுதகரராகிய முருகக்கடவுளை, தம்ப விம்ப, கும்பம் என்னும் மூன்றிலும் இரவிலே விதிப்படி பூஜை செய்து, வெல்லம் சேர்த்து நெய்யினாற் சமைத்த மோதகத்தை நிவேதித்து, வணங்கித் துதித்து, அவருடைய புராணத்தைப் படித்து, சிறிது சலத்தை ஆசமித்து, உபவாசமிருந்து, சப்தமி திதியில்

*எதிர்பார்ப்பைக் குறைத்துக்கொண்டால் ஏமாற்றம் ஒன்றும் பெரியதாக இருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானுக்கு விசேட பூஜை செய்து விதிப்படி பாரணம் செய்து சிரத்தையோடு அனுட்டித்தால் சகல வரங்களையும் பெறலாம். வசிட்ட முனிவர் சுப்பிரமணியப் பெருமானின் விரதங்களின் மகிமையை முசுகுந்தச் சக்கரவர்த்திக்குக் கூறினார். அவர் அதன்படி நோற்று, முருகப்பெருமான் மயிலேறி வந்து அவருக்குக் காட்சி கொடுத்து அவர் விரும்பிய வரங்களை அளித்தார்.

பரமாசாரியராகிய முருகப்பெருமானது நோன்புகள் பெரும் சிறப்பு உடையனவாகும். ஆதலால் இந்த விரதத்தை அனுட்டித்தவர்கள் எண்ணிய எண்ணியவாறு பெறுவர். மனம் பொறி வழி போகாது இருக்கும் பொருட்டு உணவைச் சுருக்கியேனும், அல்லது உணவு அருந்தாது, மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு வழிபடுதலே விரதமாகும். உண்மையான விரதத்தினால் மட்டுமே வாழ்வு வளம்பெறும்.

குற்றாலக் குறவஞ்சி எனும் நூலிலே கந்தசஷ்டி விழாபற்றிய குறிப்பு ஒன்று கூறுகிறது. வள்ளிக்குறத்தியை மணந்த முருகனாம் குறவன், முதல்நாள் வேட்டைக்குப் போனார். ஆறுநாட்கள் கழித்து அவனுக்கு ஒரு கொக்கு அகப்பட்டது. அக் கொக்கை அவித்து ஒரு சட்டியில் சாறு (குழம்பு) வைத்தான். புலாலை வெறுக்கும் பிராமணர், சைவர், முனிவர் முதலாய் எல்லாரும் கொக்கை அவித்த சட்டிச்சாறு (சூரபத்மனாகிய மாமரத்தை அழித்த கந்தசஷ்டி விழா) மிகவும் நல்லது என்று ஏற்றுக்கொண்டனர். மீறும் இலஞ்சிக் குறத்தியைக் கொண்ட செவ்வேட்குறவன் முதல் வேட்டைக்குப் போன நாள், ஆறுநாட்கூடி ஒரு கொக்குப் பட்டது. அகப்பட்ட கொக்கை அவித்து ஒரு சட்டியில் சாறாக வைத்தபின் வேதப் பிராமணர் தாமும் கொண்டார்! சைவர் தாமும் கொண்டார். தவப்பெருமுனிவரும் ஏற்றுக்கொண்டார். இதைப் பிடிக்கச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே "கண்ணிகொண்டு வாடா குளுவா"

கொக்கு - பறவை, மாமரம்
அவித்தல் - வேகவைத்தல், அழித்தல்
சட்டி - மட்கலம், சஷ்டி
சாறு - குழம்பு, விழா.
வைத்தல் - காய்ச்சுதல், நிகழச் செய்தல்.

கந்தசஷ்டி விழா வேதப் பிராமணர், சைவர், முனிவர் ஆகிய பெருமக்களெல்லாம் மகிழ்ந்து ஏற்றுக்கொண்டாடி வரும் மாண்புடையதென இப் பாடலால் கவிஞர் விளக்கி இருக்கிறார். எனவே திருமுருகன் வழிபாடு வேத காலம் முதற்கொண்டு நிகழ்ந்து வருகிறது என்பது மறுக்கவொண்ணாத உண்மையாகும். முருகன் அறிவு, அழகு, வீரம் ஆகிய மூன்றிற்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவன். சிவகுமாரனாம் முருகனே பிரணவம். முருகனின் திருநாமத்தினை ஒருமுறை உள்ளம் கசிந்து ஓதினால் உற்றதுயர் தீரும். தன்னைத் தியானிப்பவர் யாவராயினும், இன்முகத்துடன் வரமீந்தருளும் கருணைக் கடல். அவரே அகாரம், உகாரம், மகாரம். பிரமப்பொருள் முருகனே என்பதை விளக்கவே வேதம் "சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம், சுப்ரமண்யோம்" எனப் பிரணவத்துடன் மும்முறை கோஷிக்கின்றது.

*தவறே செய்யாத மனிதன் இல்லை. தவறை திருத்திக்கொள்ளாதவன் மனிதனே இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாம் இருக்கப் பயமேன்" என்று காட்சிதரும் கந்தவேளை குலதெய்வமாகவும், இஷ்டதெய்வமாகவும், வழிபடுவோர் இப்புண்ணிய நோன்பினை கடும் தவமாகக் கருதி ஆறு தினங்களும் உபவாசமிருந்து நோற்பர். இயலாதவர்கள் ஒருவேளை உணவு உண்டு ஆறாம் நாள் உபவாசமிருத்தலும் நடைமுறையிலுண்டு. இவ்விரதம் உணர்த்தும் தத்துவம் ஆணவ அடக்கமாகும். முருகவேள் சூரனின் ஆணவத்தினை ஞானவேல் கொண்டு அடக்கி, அவனுக்கு திருவருள் ஞானத்தினைக் கொடுத்து உய்வுகொடுத்தருளினார். ஆணவத்தினை அடக்கம் பெறச் செய்யும்போதுதான் இறைவன் திருவருள் கிட்டும். திருவருள் ஞானத்தின் மூலம் எமது அஞ்ஞானம் அகன்று மெய்ஞ்ஞானம் கிட்டும். மெய்ஞ்ஞானத்தினை அளிக்கவல்ல விரதமே கந்தசஷ்டி விரதமாகும். மீளத் தூய்மையும், சாந்தியும், ஞானத்தையும் தரவல்ல மகத்தான விரதம். பழவினைகளை அகற்றி, மறுவாழ்வுக்கான வழியினை நல்கும் புண்ணிய விரதமாகும்.

எங்களுடைய வாழ்க்கைத் தத்துவத்தை விளக்க ஏற்பட்ட திருவிளையாடலே கந்தவேளுக்கும், அசுரப்படைக்கும் இடையே நடந்த சூரசங்ஹாரம். பிரபஞ்ச வாழ்வு ஒரு போராட்டம். ஒவ்வொருவர் உள்ளத்தில் எழுகின்ற தேவ இயல்புக்கும், அசுர இயல்புக்கும் இடையில் இடையறாத போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. காமம், குரோதம், லோகம், மோகம், மதம், மாற்சரியம் போன்ற தீய விருத்திகளே அசுரப்படை. ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று அஞ்ஞான இருளே சூரன், சிங்கன், தாரகன் ஆகியோர். இத்தீமைகளையும், இருள்மயமான அசுர இயல்புகளையும் ஞானம் எனும் வேலாயுதத்தால் பிளந்து நாம் விடுதலையடைய வேண்டும் என்ற தத்துவத்தைக் காட்டும் செயல் வடிவமே கந்தசஷ்டி நாட்களில் நடந்த போரும் சூரசங்காரமுமாகும். ஆகவே இந்தப் புனித நாட்களில் அவரை வழிபட்டு கந்தவேளின் கடாட்சத்தையும், அருளையும் பெற்று உயர்வதுடன் வாழ்நாள் முழுவதும் அந்த ஞானவேல் ஏந்திய கந்தனை நினைந்து துதித்து, சரணாகதியடைந்து பிறவிக் கடலுள் மீண்டும் மீண்டும் வீழ்த்தும் மாயா தத்துவங்கள் யாவற்றையும் அழித்து பிறவாத இறப்பற்ற ஆத்ம சொரூப நிலையை உணர்த்துமாறு வேண்டிப் பணிவோமாக.

ஆறுறையும் நீத்து அதன்மேல் நிலையைப்
பேற அடியேன் பெறுமாறு உளதோ?
சீரு வருசூர் சிதைவித்து இமையோர்
கூரு உலகம் குளிர்வித்தவனே.

திருச்செந்தூர் வந்து முருகனைச் சரணடைந்து அவருக்கு ஏற்பட்ட நோய் நீங்கித் தேவராய சுவாமிகள் கந்தசஷ்டி கவசத்தைப் பாடி அருளியுள்ளார். ஆறுபடை வீட்டிலும் எழுந்தருளிய முருகப்பெருமானுக்கு ஆறு கவசங்கள் பாடி அருளினார். அதனைக் கந்தசஷ்டி நாட்களிலும், தினமும் பாராயணம் செய்து ஞானபண்டிதசாமியின் திருவருளைப் பெறுவோமாக. வறுமை, நோய், பிணி, துன்பங்கள், வல்வினைகள் போக்கி சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்று வாழ்வோமாக.

*புத்தகத்தைத் தலைகுனிந்து பார். உன்னை தலைநிமிர்ந்து நடக்க வைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம் போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித் தோங்கும் நிஷ்டையும் கைகூடும்
நிமலரருள் கந்தர் சஷ்டி கவசம் தனை.

முருகா சரணம், குமரா சரணம், குகனே சரணம், கந்தா சரணம்.

சரணம் சரணம் சரவணபவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(தொடரும்...

**பாடிப் பாடிப் பணிந்திடுவோம் சந்நிதியானை**

சந்நிதி வேலவனின் சம்மதம் உள்ளார்க்கு
எந்நிதியும் சேர்ந்திடும் எண்ணிறைந்து - துன்பந்
தருதீ வினையகல தம்பிரான் கோடி
அருள்பெற்று உய்வோம்வா ரீர்.

நெஞ்சில் நினைக்கிறேன் நாளும் பொழுதுமுனை
பிஞ்சகன் சந்நிதிக் கந்தாநீ - சஞ்சலம்
போக்கி நலம்பெறு வாழ்வுதனை தந்தென்னை
தூக்குவாயுன் பூவடிக் கீழ்.

பிறப்பில் அழகனாம் கூர்வேல் குமரன்
இறப்பு மிலாத இனியன் - அறம்பல
செய்யு மடியார் செகந்தனில் கெட்டொழியா
துய்ய இருப்பான் துணை.

தந்தைக் குகுருவாய் வந்த குமரன்நீ
கந்தாவுன் பாதம் பணிந்திட்டேன் - எந்தன்
சரவணா வள்ளி மணவாளா என்னை
அரவணைப்ப தெப்போது சொல்.

அன்றரக் கன்அழிந்த அற்புத நல்நாளாம்
என்றி னிதாக மகிழ்ந்திடுவோம் - என்றும்
சுடரேற்றி வைகாசி விசாகத்திரு நாளில்
இடர்நீங்கப் பாடுவோமின் புற்று.

- சீ. சாந்தநாதன் -

*உழைப்பு வறுமையை மட்டும் விரட்டவில்லை. தீமையையும் விரட்டுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சங்களும் வரலாறுகளும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

சூரிய சந்திர வம்சங்களின் முரண்பாடு, உலகம் தழுவிய முரண்பாடுகளாகும். மேலும் சூரிய வம்சத்திற்கு குறியீடாக முருகனும், சந்திர வம்சத்திற்கு குறியீடாக பிள்ளையாரும் விளங்குகின்றார்கள். இந்த வகையில் முருகனுடைய சின்னம் அறுகோணமாகவும், பிள்ளையாருடைய சின்னம் நான்கு கோணமாகவும் திகழ்கின்றது. முக்கியமாக யூதர்களுடைய சின்னமாக அறுகோண வடிவிலான சின்னமே காணப்படுகின்றது. தவிர தன்னை ஆரியனாகவே காட்டிக்கொண்ட ஹிட்லர் பிள்ளையாரின் சின்னமான நான்கு கோணச் சின்னத்தையே தனது சீருடையில் அணிந்து இருந்தமை சான்றாகும்.

எவ்வாறாயினும் ஒரு காலத்தில் அறுவகைச் சமய வழிபாடே உலகம் தழுவியதாக இருந்து இருக்கின்றது. இறைவன் ஒருவன் என்ற கோட்பாடும் இடையில் புகுந்து உலகம் முழுவதையும் ஒரே ஆட்சியில் வைத்திருந்தமையாலேயே பொது மொழிப் பயன்பாடு மதநம்பிக்கைகளிடையே இடம்பெற முக்கிய காரணமாகவும் விளங்குகின்றது. பின்னர் ஒரு இறைவன் கோட்பாடு வீழ்ச்சியடைந்து, ஆறுவகைச் சமயங்கள் உருவானாலும் இலங்கை இந்திய நாடுகளிடையே ஆறுவகைச் சமயங்களுடன் உருவ வழிபாடுகளும் மீண்டும் உருவானாலும், யூதர்கள் அறுகோண சின்னத்தை மட்டுமே பயன்படுத்துகிறார்கள். அதுபோல் ஆரியச் சின்னமும் நான்குகோணச் சின்னமாகவே விளங்குகின்றது.

இந்தவகையில் புராண இதிகாசங்கள் வெறும் கட்டுக்கதையல்ல. வாழ்வியல் அனுபவங் களும், வரலாற்று அனுபவங்களும் சான்றுபகர்வதால் அவை நிதர்சனமான உண்மைகள் என்பது புலப்படுகின்றது.

பாகுபலி என்ற திரைப்படம்கூட, சந்திரவம்ச காவியமாகவே விளங்குகின்றது. மேலும் பொன்னியின் செல்வன் திரைப்படத்திலும் சந்திரவம்ச சாயலே தெரிகின்றது. ஆகவே வரலாற்றுத் தொடர்ச்சி புராண இதிகாசங்களில் இருந்து தொடர்ந்து வருவதை இந்தத் திரைப்படங்கள் வாயிலாக ஊகிக்க முடிகின்றது.

இருந்தபோதும் சந்திர வம்சத்தில் சகோதரர்கள் ஐவராக இருக்கின்றனர். ஆனால் பாகுபலி படத்தில் ஒருவராகவும் பொன்னியின் செல்வன் திரைப்படத்தில் சகோதரர்கள் இருவராகவும், ஆனால் இரண்டிலும் ஆட்சிக்குரிய மூத்தவருடன் முரண்படுவதாகவும் காட்டப்பட்டுள்ளது. இது சந்திரவம்ச உள்ளக முரண்பாடுகள் போலவும் தெரிகின்றது.

மேலும் உலக நாடுகளிடையே இருந்த வர்த்தக உறவுகள் வரலாற்றுக் காலங்களில் இருந்தே இடம்பெற்று வருவதால் உலகில் ஏற்பட்ட பல்வேறு சமய சமூக மாற்றங்கள் இலங்கை இந்திய நாடுகளின் கரையோரப் பகுதிகளில் தாக்கம் செலுத்தியும் இருக்கின்றது.

இந்த வகையில் தொண்டைமானாறு தொடக்கம் கதிர்காமம் வரையான பாத யாத்திரைகள் இந்த வரலாற்றுப் பாரம்பரியங்களை நினைவுபடுத்துகின்றது. இன்று செட்டிமார்கள் சந்நிதி ஆலயத்துக்குகருகிலும், மாதகல் பண்டத்தரிப்புக்கு இடையிலும், கொழும்புத் துறையிலும் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

*சிக்கனமாக வாழும் ஏழை சீக்கிரமாக செல்வந்தனாவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சிக்காலத்தில் ஊர்காவற்துறையே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததுடன் இவர்கள் வழித்தடங்கல்களாக வேலணை, சரவணை, மண்டைதீவு, பூநகரி, மறவன்புலவு, நாவற்குழி, மட்டுவில் என முன்னைய வழித்தடங்களை குறுக்கறுத்து, ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சியமைத்து இருந்தார்கள். இதனால் ஆரியச்சக்கரவர்த்திகள் ஆட்சியை கட்டுப்படுத்துவதற்காக ஒல்லாந்தர்கள் ஊர்காவற்துறையில் கோட்டை அமைத்தார்கள்.

எனவே இலங்கை மிகவும் கேந்திர முக்கியத்துவம் மிக்க நாடாக இருப்பதால் உலக வரலாற்றுத் தொடர்புகள் இருக்கின்றது.

---

## தேடி வரும் தெய்வம்

தன்னிடம் சீடனாக புதிதாக வந்து சேர்ந்தவரிடம் குரு கேட்டார், "ஆன்மீகத்தின் நோக்கம் என்ன என்று சொல்ல முடியுமா?". புதிய சீடன், "இறைவனை அறிவதும், அடைவதும்தான் ஆன்மீகத்தின் நோக்கம்". "அப்படியா?" "என்ன அப்படியா என்று கேட்கிறீர்கள்... அப்படித்தானே இருக்க முடியும்?". "சரி.... இத்தனை நாள் ஆன்மிகத்தில் சாதகம் செய்து வருகிறாயே இறைவனை அறிந்தாயோ?". "இல்லை... ஆனால் முயன்று கொண்டிருக்கின்றேன்". "நல்லது... உண்மையிலேயே இறைவனை அறிந்துகொண்டுவிட முடியும் என்று நம்புகிறாயா?" சீடன் சற்றே யோசித்துவிட்டுச் சொன்னான் "நம்புகிறேன்... இருப்பினும், கொஞ்சம் சந்தேகமாகவே இருக்கிறது". "எதனால் இந்த சந்தேகம் வருகிறது?" "பலர் பலவிதமாக இறைவனைப் பற்றிச் சொல்கிறார்கள். மிகவும் ஆராய்ந்து பார்த்தால் தெளிவை விடக் குழப்பமே மிஞ்சுகிறது". "நல்லது... எப்போது நீ உள்ளது உள்ளபடி சொன்னாயோ அதுவே நல்லது. சீடனே... இப்போது நான் வேறுவிதமாகக் கேட்கிறேன்... நீ ஆண்டவனைத் தெரிந்துகொள்ள, அடைய உண்மையிலேயே விரும்புகிறாயா?" "ஆமாம் குருவே". "உன் விருப்பத்தின் காரணமாகத்தான் நீ ஆன்மிகப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறாய். அப்படித்தானே?"

"ஆமாம் குருவே". "அன்புள்ள சீடனே! நீ இறைவனை அடைய, ஓர் எளிமையான மாற்று வழியைச் சொல்லித் தருகிறேன்..". "மிகவும் சந்தோசம் குருவே... இந்த வழிக்காகத்தான் நான் காத்துக்கொண்டிருக்கிறேன்". "ஆனால் இந்த வழியில் நீ இறைவனை அடைய முடியாது... ஆனால் இறைவன்தான் உன்னை வந்து அடைவான்". "இது குழப்பமாக இருக்கிறதே" "ஒரு குழப்பமும் இல்லை... ஒரு அரசன் இருக்கிறான்... பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு அவன் ராஜா. அவன் அருகே நெருங்குவதோ பேசுவதோ அறிவதோ எளிமையான விசயம் அல்ல. முடியவும் முடியாது". "ஆம்" "ஆனால், ராஜாவை சந்திக்க வேண்டும் என்கிற பிரஜை. ஓர் அருமையான காரியத்தைச் செய்கிறான்... அவன் தேசத்தில் உள்ள மக்கள் எல்லோருக்கும் பயன்படும்படியாக உழைக்கிறான். பல அறச் செயல்களைச் செய்கிறான். இந்தச் செய்தி ராஜாவுக்குப் போகிறது. உடனே ராஜா பிரதிநிதிகளை அனுப்பி தன் அரசவைக்கு அவனை வரவழைக்கிறார். அல்லது அவரே நேரில் அவனைப் பார்க்க வருகிறார். அவனோடு உரையாடுகிறார்... பாராட்டுகிறார்... பரிசுகள் தருகிறார். இது நடக்கும் இல்லையா?" "நிச்சயமாக நடக்கும் குருவே". "இப்போது ராஜாதான் இறைவன். நீதான் அவன். நீ என்ன முயற்சி செய்தாலும் ராஜாவை நெருங்குவது கஸ்டம். ஆனால் உன் செயல்கள் பலருக்கும் பயனுடையதாக இருந்தால்... அந்த ராஜாவே (இறைவனே) உன்னைப் பார்க்க வருவார். எனவே இறைவனைப் பார்க்கும் முயற்சியைக் கைவிடு. இறைவன் உன்னைத் தேடிவரும் தகுதியான செயல்களில் மட்டும் ஈடுபடு... இறைவனே உன்னை வந்து அடைவான்... சரிதானே...?"

"மிகவும் சரிதான் குருவே...". "நல்லது சீடனே, இனி ஆன்மிகம் உனக்கு கைகூடும். போய் வா....".

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 72

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 இரையினைத் தேடலும் இனத்தினைப் பெருக்கலும்
அஃறிணை என்பதற்கு அர்த்தமாம் அதுபோல
இறைவனைத் தேடலும் அறிவினைப் பெருக்கலும்
உயர்திணைக்கு அர்த்தமாம் உணர்ந்தே உயர்வீர.

02 இறைவனைக் கண்டால் கேட்டுவாங்கப் பலவுண்டு
என்றெண்ணும் வரைக்கும் இறைகாட்சி தென்படாது
கண்டதே போதுமுனை வேறென்ன வேண்டுமினி
என்றெண்ணும் நிலைதோன்றக் கண்முன்னால் இறைதோன்றும்.

03 வெண்ணிலா வானில் வெளிவரும் வேளைதனில்
எண்ணரிய வானமது எம்கண்ணில் தொலைதல்போல்
மனக்கண்ணுள் இறைவனை நினைத்திட்டால் போதும்
அகிலத்து மற்றவைகள் மறைந்தே போகும்.

04 பசியோடு இருக்கின்றான் இறைவன் என்றெண்ணி
பலகாரம் சுட்டுநாம் படைத்துப் பலனில்லை
படைத்தவன் தருகின்றான் பெற்றுண்போம் என்பதுவே
படைத்தவன் பாதத்தில் படைத்துப்பின் உண்பதுவாம்.

05 கல்லிலே கட்டையை உரைத்திட உரைத்திட
கரையிலே தோன்றித் திரள்கின்ற சந்தனம்போல்
நெஞ்சிலே இறைவனை நினைத்திட நினைத்திட
உணர்வுக்குள் ஒளியாகத் திரள்வோனே இறைவனாம்.

06 நமக்கிறைவன் தந்தவற்றை பிறர்க்கு நாம் கொடுப்பது
தானம் என்கின்ற தத்துவத்துள் அடங்காது
எமக்குப் பின்னது பிறர்க்கு என்பது
நியதியாம் கொடுத்தே கடன்தனை அடைப்போம்.

*இளமையில் சோம்பல் என்பது முதுமையில் வருத்தத்தைக் கொடுக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 செப்புச் சங்கிலிக்கு தங்கமுலாம் பூசியதை
அப்போதைக் கணியலாம் தங்கமதாய் ஆகாது
அப்படித்தான் பக்தியும் விரதமுலாம் பூசியதை
அப்போதைக் கேற்றிடலாம் பக்தியதாய் ஆகாது.

08 மத்தினைக் கொண்டேநாம் தயிரினைக் கடைந்திட
வெண்ணை திரண்டதில் வெளியாகி வருதல்போல
பக்தியைக் கொண்டு நாம்புத்தியைக் கடைந்திட
சிவத்தோடு சக்தியும் வெளிப்படும் காணலாம்.

09 சேறு குழைக்கையிலே சேறேன்று இருந்திடுவோம்
பிள்ளையார் ஆனபின்தான் பெருமைகளைத் தெரிந்திடுவோம்
எளிமையாய் இருப்போரை எளியோராய்க் கருதிடுவோம்
எழுந்தவர் இறையடைய இழந்தேநாம் வருந்திடுவோம்.

10 மினுக்குதற்கு சாம்பலிட்ட பாத்திரத்தைக் கண்டுநாம்
அழுக்கென்றே ஒதுக்கிடுவோம் கழுவப்பின் பற்றுவோம்
உளம்மினுக்க அழுக்குடலும் சுமப்போரைக் கண்டு நாம்
விலகென்போம் விலகிடத்தான் உள்ளத்தை உணருவோம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும்
மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்
பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர்
கீழே உள்ள முகவரியுடன்
தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவபூமியில் இணுவில் சிவகாமி

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

ஏழிசை வாழ்ந்திடும் இணுவையம் பதியிலே இருபத்தொரு ஆலயங்கள் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புக்களோடு அருள்பாலிக்கும் ஆலயங்களாக, அழகொழுகு வேத மந்திர ஞானபீடங்களாக இன்றும் விளங்குகின்றன.

அற்புதம், அதிசயம், ஆனந்தம், பிரமாதம், பேரருள், பூஜை ஒழுங்கு, அருச்சனை அழகு, பொங்கல் படையல், மடை, நடை உடை பாவனை, கந்தபுராண கலாசாரம், மான்மியம், புராணபடன வித்தகம், பஜனாராதனை, அபிஷேக ஆராதனைகள், மஹோற்சவ அலங்கார உற்சவங்கள், ஆய கலைகளின் பாண்டித்தியங்கள், அட்டாங்க பஞ்சாங்க அங்கப்பிரதட்சண வழிபாடுகள், பால்க்காவடி, பன்னீர்க் காவடி, பாட்டுக் காவடி, புஷ்பக் காவடி, செதில்காவடி, முள்ளுக் காவடி, தூக்குக் காவடி, நேர்த்திக் காவடி, நடனக் காவடி, இருக்கைக் காவடி, சயனக்காவடி, ஆலிக்கும் அந்தணர் கோல வழிபாடுகள், இன்பத் தமிழ், இனிக்கும் தமிழ், சிவத்தமிழ், பன்னிரு திருமுறைகள், மணி ஓசைகள், மணிமலர் மாலைகள், மணமலர் மாலைகள், சப்பறங்கள், இரதங்கள், மஞ்சங்கள், தவில் கச்சேரிகள், இசைக்கச்சேரிகள், யாக வேள்விகள், கும்பாபிஷேகங்கள், கோபுர தரிசனங்கள் என இணுவில் ஆலயங்களால் கொலுவாகின்றன.

இத்தனைக்கும் ஆயிரம் பேறுகொண்ட ஆலயமாம் இணுவில் அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலயம் சுமார் 800 வருட கால வரலாற்றினைக் கொண்ட புராதன ஆலயமாகும். பதினான்காம் நூற்றாண்டில் தமிழ் மன்னர்களால் நிறுவப்பெற்ற மாதவம் வாய்ந்த ஆலயமாகும். அம்பாளின் திருவருளும் வாலாயமும் வரமும் வாழ்வும் இணுவிலின் ஒவ்வொரு வீட்டிலும் பேறாகிறது. கலாபூஷணம் மூ. சிவலிங்கம் அவர்கள் இணுவிலின் வரலாற்றினை நீள நினைந்து ஆழ அறிந்து அகல வரமாக்கிய தொண்டினைச் செய்துள்ளார்.

“இணுவில் அருள்மிகு சிவகாமி அம்பாள் ஆலய வரலாற்றுப் பதிவுகள்” என்ற காத்திரமான ஆவண நூலை, தனது தொண்ணூறாவது வயதில் முப்பத்து மூன்று நூலாக இயற்றியும் தேடியும் ஆக்கியும் அற்புதமாக்கிப் படைத்துள்ளார்.

தள்ளாத வயதிலும், தாழாத கீர்த்தியோடு, மாறாத இரசனையோடு அட்சரம் பிசகாமல் கலாபூஷணம் மூ. சிவலிங்கம் அவர்கள் மேற்படி நூலை வடிவமைத்துள்ளார்.

ஒரு பேராசிரியருக்கு இருக்கவேண்டிய அறிவு திறன் மனப்பாங்கு கடமை கண்ணியம் கட்டுப்பாடு பொறுமை பொறுப்புக்கூறல் அகத்தூய்மை, புறத்தூய்மை, கற்பு, கல்பிதம், மனோதர்மம், வாசிப்பு, சொல்வளம், பொருள்வளம், மொழி வாண்மை, இலகு தமிழ், எளிய நடை, சிந்திக்க வைக்கும் சந்தம் என்கின்ற அத்தனையும் நிரம்பப்பெற்றவர்தான் மூதறிஞர் மூ. சிவலிங்கம் ஐயா அவர்கள். ஒரு கலாநிதிப்பட்டம் இவரைத் தேடிவர வேண்டுமே தவிர இவராக அந்தப் பட்டத்தை நோக்கி பயணிக்கக்கூடாது.

*விதைத்துக்கொண்டே இரு. முளைத்தால் மரம் இல்லையேல் உரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லும் மணலும் சீமேந்தும் கருங்கல்லும் எமக்கு மட்டும் சொந்தமல்ல. அவை பலருக்கும் சொந்தமாகும். ஆனால் மூ. சிவலிங்கம் ஐயாவின் 33 நூல்களுக்கும் உரிமைக்காரர் மூதறிஞர் சிவலிங்கம் ஐயா அவர்களே. ஆதலால் ஐயா அவர்கள் கேட்காமலேயே அவருக்கு உரியதான ஒரு கௌரவத்தினை வழங்குவது மிகப்பெரிய தர்மமாகும்.

2003 தொடக்கம் அம்பாள் அவரது உள்ளக் கமலத்துள் வீற்றிருந்து திருவருளாகிய சிவத்தமிழ் அமுதினைப் பேறாக்குகின்றாள். ஒரு கிராமத்திற்கு இருக்கவேண்டிய அத்தனை வளங்களையும் அத்தனை வரப்பிரசாதங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதனால் இணுவில் என்றும் இணையிலியாக மிளிர்கின்றது.

சக்தியின் மகத்துவம் தொடக்கம், சாத்திரம்மாவின் பிடியரிசி தொண்டு, ஆலய வளர்ச்சி, கட்டுமானங்கள், சின்னத்தம்பி புலவர், மஹோற்சவ விழாக்கள், தர்மகர்த்தாக்கள், அந்தணப் பெருமக்கள், மகா கும்பாபிஷேகம், புலவர்கள், தொண்டர்கள், விளம்பரம் இல்லாது உழைக்கும் களம் பலகண்ட சிவகாம சுந்தரியின் அடியவர்கள் 27.03.2022இல் நடைபெற்ற பெருஞ்சாந்தியும் குடமுழுக்கும் பெரிய சந்நியாசியப்பாவின் திருப்பெருங்கருணை யாவுமே சிவலிங்கம் ஐயாவால் விருந்தாக்கப்பட்டுள்ளன.

"பிடியரிசி எடுத்தே
பெருங் கோயில்தனை அமைத்த
பிராட்டி சாத்திரம்மாவுக்கே
பேறு தந்தாள் சிவகாமி"

சிறைவாசம் சென்ற புலவனும் சிவகாமியைப் பாட சிறைக்கதவு திறந்து புலவனை விடுவித்த அதிசயம் சிவகாமி அம்பாளின் அற்புதமாக இன்றும் இவ்வாலயத்தில் ஒளிர்கிறது.

மொத்தத்தில் இந்நூல் புகழ் மற்றும் பாராட்டுக்களுக்கு அப்பால், ஆன்மீகப் பேறுவுக்கும் தேன் தமிழ் இலக்கியமாகும். சிவதவமுடைய மூ. சிவலிங்கம் ஐயா அவர்கள் சிவகாமி அம்பாளை கண்குளிர வரமாக்கியுள்ளார். இன்னும் சில தகவல்கள் சேர்க்கப்படுவது அடுத்த பதிப்பினை நிறைவாக்கும்.

---

## சொர்க்கம் எது?

ஒரு முறை சிவனும் பார்வதியும் வானத்தில் உலா வந்துகொண்டிருந்தனர். அப்போது ஒரு குளக்கரையில் ஒரு கொக்கு ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது.

"உடனே பார்வதி சிவனிடம், இந்தக் கொக்கு ஏன் ஒற்றைக் காலில் நிற்கிறது" என்று கேட்டார். சிவன், "கொக்கே உனக்கு என்ன வேண்டும்? சொர்க்கத்திற்கு வருகிறாயா?" என்று கொக்கிடம் கேட்டார். "சொர்க்கத்தில் அயிரை மீன் கிடைக்குமா?" என்று கேட்டது கொக்கு. "கிடைக்காது" என்றார் சிவன். "அப்போ, சொர்க்கத்தை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். எங்கே அந்த அயிரை மீன் கிடைக்கிறதோ, அதுவே எனக்கு சொர்க்கம்" என்றது கொக்கு.

எங்கே நமக்கு நிம்மிதி கிடைக்கிறதோ அதுவே நமக்கு சொர்க்கம்.

*நீ வீணாக்கும் ஒவ்வொரு நொடியும் உன்னை வறுமைக்குள் தள்ளிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தி

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

பக்தி என்பதும் ஒருவகை அன்புதான். இறைவனிடத்து நாம் வைக்கும் அன்புதான் பக்தி. பக்திகொண்டு இறைவனை வழிபடவும் இறைவன்தான் எமக்கு அருள்புரிய வேண்டும். "அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்கின்றது திருவாசகம்.

பக்தியின் வெளிப்பாடு "வழிபாடு செய்தல்" ஆகும். எல்லா மதங்களுமே வழிபாட்டின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. வழிபடும் நேரம், காலம், முறைகள், சடங்குகள், கிரியைகள் எல்லாமே மதத்துக்கு மதம் வித்தியாசப்பட்டாலும் நோக்கம் என்னவோ ஒன்றுதான். மனிதனாகப் பிறவி எடுத்த ஒவ்வொருவரும் ஆண்டவனை வணங்கி நல்லன செய்து நற்பேறு அடையவேண்டும் என்பது சகல மதங்களினதும் பொதுநோக்கம் ஆகும்.

எமது நோக்கம் ஒரு புறமிருக்கட்டும். இனி இறைவனின் எதிர்பார்ப்பு எப்படி என்று பார்ப்போம். இறைவன் எதை விரும்புகின்றான் என்று பார்ப்போம். இறைவனுக்குத்தான் விருப்பு வெறுப்பு இல்லையே பின்னர் என்ன இறைவன் விரும்புவது என்று நீங்கள் கேட்கலாம். உண்மைதான்.

ஆனால் ஆண்டவனது அதிகமான ஈடுபாடு எதனை நாடுகின்றது என்பதை மெய்யடியார்கள் வரலாறுகள் கூறியுள்ளன. அதனை என்ன என்று பார்ப்போமே.

இதனை விவரிக்க நான் உங்களுக்கு ஒரு குட்டிக்கதை சொல்வேன்.

ஒரு ஊரிலே ஒரு செல்வந்தர் இருந்தார். அவருக்கு 4 மனைவிகள். கொஞ்சம் கஷ்டம்தான் ஆனால் நிரம்ப செல்வமும், வளமும், பொறுமையும், விவேகமும் அவரிடம் இருந்தபடியால் அவர் ஏதோ சமாளித்து வாழ்க்கையை நடாத்திச் சென்றார். ஒருமுறை அவர் தனது வியாபார நோக்கமாக வெளிநாடு சென்றார். அங்கிருந்து திரும்பி வருமுன்னர் தனது மனைவிமாருக்கு கடிதம் எழுதினார். உங்களுக்கு விருப்பமான பொருட்கள் என்ன என்ன வேண்டும் என்று எழுதுங்கள் என்று. அப்போது தொலைபேசி வசதிகள் இல்லை. கடிதம்தான் அவருக்குக் கைகொடுத்தது. அவரது மனைவிமாரிடமிருந்து பதில்களும் வந்தன. நான்காவது மனைவி எழுதியிருந்தாள் எனக்குப் புதுப் புடவைகளும் புது டிசைனில் ஆபரணங்களும் வாங்கி வாருங்கள் என்று. மூன்றாவது மனைவி எழுதியிருந்தாள் எனக்கு நேரம் போகுதில்லை. வாசிக்க நல்ல புத்தகங்கள் நாவல்கள் வாங்கிவாருங்கள் என்று. இரண்டாவது மனைவி எழுதியிருந்தாள் உங்களுக்குத்தான் தெரியுமே நான் ஒரு நோயாளி என்று. இங்கு கிடைக்காத நல்ல மருந்துகள் அங்கு இருந்தால் வாங்கி வாருங்கள் காத்திருப்பேன் என்று. முதல் மனைவி எழுதியிருந்தாள் எனக்குப் பொருள் ஒன்றும் வேண்டாம். நீங்கள் சுகமாக வந்து சேருங்கள். எப்போதும் உங்கள் நினைவாக இருக்கிறேன் என்று.

மனைவிமார் வேண்டிய பொருட்கள் எல்லாம் வாங்கிக்கொண்டு ஊர் திரும்பினார் அந்த செல்வந்தர். தான் கொண்டுவந்த பொருட்களை எல்லாம் அவரவரிடம் கொடுத்துவிட்டு

*அடுத்தவர்களுக்குக் கெடுதல் நினைக்காத எல்லா நேரமும் நல்ல நேரம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலமற்ற அன்பைத் தன்மேல் காட்டிய தன் முதல் மனைவியோடு மன நிறைவோடு தங்கி வாழ்ந்தார் அச் செல்வந்தர்.

இதேபோன்றுதான் இறைவனும் தன்மேல் பக்திகொண்டு, வேண்டும் அடியவர்களுக்கு வேண்டியதெல்லாம் கொடுத்தாலும், அவர் விரும்பி உறைவது தன்னலமற்ற பக்திகொண்ட நெஞ்சங்களிலேதான்.

நாமும் ஈசனை அசத்திய அடியார்களைப் பின்பற்றி, அவன் இன்னருள் பெறுவோமா?

## செல்வச்சந்நிதி முருகா வாழ்க வாழ்க எம் குடியுரிமை தடை நீக்கு

முருகா முத்துக் குமரா சிவசக்தி
முத்தே முழுமதியே ஏழை பங்காளா
வந்த முடிவு முழுவதும் முடிவில்லா
கற்பனைக் கோட்டையே சந்நிதியானே
கயவர்களின் நாடகமிதோ நாம் அறியோம் வேலே
கண்கள் பன்னிரண்டால் பார்த்து நிற்காதே
பாவிகளா நாம் காட்டுவ தெல்லாம்
காலா கால அசுரரின் காட்சியே
மெல்லக் கொல்லும் என்றாலும்
மேல்நாட்டு அரசுகளும் காலமாற்றம்
எம் முடிவை முடிவு கொள்ள
தள்ளியே செல்லு தையா
முருகா அப்பனுக்கு உலக ஞானம்
முன் ஓதியவனே முருகா
நாம் கேட்பதை இந்த சகாப்தத்தில்
நாட்டி விடிவை தந்துவிடு முருகா
வாழ்க வாழ்க எம் தமிழ்
வறுமை நீங்க முருகா
எத்தனை பேர் கேட்டோம் முருகா
அத்தனையும் உன் காதில் விழவில்லையோ
செவிமடுத்து உன் உள்ளத்தில் உரமேற்றி
செய்து முடித்து முடித்துவிடு முருகா.

-ம. கணேசலிங்கம்-

*விடாமுயற்சியே உனக்கான வெற்றியைத் தேடித்தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குங்கும மகிமை

– திருமதி பொ. செல்வக்காந்திமதி அவர்கள் –

**அஷ்ட ஸ்ரீசக்கர குங்கும மகிமை**
**வரலட்சுமி பூஜையில் குங்குமத்தால் அர்ச்சனை செய்பவர்களுக்கு**
**இதோ அஷ்டஸ்ரீ குங்கும மகிமை**

குங்கும மாவது குறைகளைத் தீர்ப்பது
குங்கும மாவது குடியினைக் காப்பது
குங்கும மாவது குணமது அளிப்பது
குங்கும மாவது கொல்வினை தீர்ப்பதே!

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதையின் குங்குமம்
[illegible]தனை யாழ்வதும் குங்கும மாமே!

நற்பதம் ஈவது நாரணிக் குங்குமம்
பொற்பினை ஈவது பூரணிக் குங்குமம்
சிற்பரமாவது சிவகாமிக் குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்கும மாமே!

தஞ்சமென்றோரை தடுத்தாண்டு கொள்வதும்
பஞ்சமா பாதகம் பரிந்து தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபயமளிப்பதும்
காஞ்சி காமாட்சியின் குங்கும மாமே!

செஞ்சுடர் போன்றது சீரான குங்குமம்
கொஞ்சும் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்களை அடக்கியருளுவதும் குங்குமம்
காசி விசாலாட்சியின் குங்கும மாமே!

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி வீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும்புக ழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அர்ச்சித்த குங்கும மாமே!

*வறுமைக்குப் பிறகு வரும் செல்வமே வாழ்க்கையில் இறுதிவரை நிலைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி அளிப்பதும் பரகதி யீவதும்
முத்தி கொடுப்பதுவும் மும்மலம் தீர்ப்பதுவும்
சித்தி தருவதும் குங்கும மாமே!

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடும் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
மதுரை மீனாட்சியின் குங்கும மாமே!

சிவசிவ என்று திருநீறணிந்த பின்
தவமான மேலோரும் தரித்துக் களிப்பதும்
சிவகாமியே எனச் சிந்தித் தணிவதும்
பல வினை தீர்ப்பதும் குங்கும மாமே!

எவைஎவை கருதிடின் அவைஇவை
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குருசெய் கரத்துடன் கும்பிட்ட பேருக்குக்
குவிநிதி யீவதும் குங்கும மாமே!

அஷ்டலஷ்மி அருள் தந்தளிப்பதும்
இஷ்டங்கள் ஈவதும் ஈட்ட குங்குமம்
கஷ்டங்கள் தவித்திடத் தென்னைக் காத்தருள் செய்வதும்
அஷ்டஸ்ரீ சக்ர குங்கும மாமே!

குஷ்ட முதலான மகாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டி ரண்டோர் அறிவித்தோர் விடிவினைக்
கிட்டவே செய்வதும் குங்கும மாமே!

பட்டகாலிலே படுமெனக் கஷ்டங்கள்
விட்டிலாமென வந்துமே வாட்டிலும்
பட்டான பார்வதி பாதம் பணிந்தே
இட்டார் இடர் தவித்த குங்கும மாமே!

சித்தந்தனைச் சுத்தி செய்வதற்கெளிய தோர்
எத்துந் தெரியாதே ஏமாந்த மாந்தரே
நித்தம் தொழும் அன்னை குங்குமம் தன்னை
நித்தியம் தரித்துமே மேன்மை அடைவீரே.

*எவ்வளவு பெரிய பிரச்சினைக்கும் கையளவு மனதிடம்தான் தீர்வு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகள்
செஞ்சுடர் ஆகுமே ஸ்ரீ சக்ரம் ஸ்வரியின்
கஞ்ச முகமலர் முகம்தன்னில் திகழ்வதும்
பஞ்ச நிதிதரும் குங்கும மாமே!

## ஆனி உத்தரம்

தில்லை நடராஜப் பெருமானின் திவ்விய தரிசனத்துக்காக அனுட்டிக்கப்படும் விரதம் ஆனி உத்தர நாளாகும். இந் நாளில் சிதம்பரத்தில் இராஜசபை என்ற ஆயிரங்கால் மண்டபத்தில் உதயத்திற்கு முன் 4 மணிக்கு மிகவும் சிறப்பாக நடராஜப் பெருமானுக்கு அபிஷேகங்கள் நடைபெறும்.

நடராஜப் பெருமானுக்கு ஆண்டில் இரண்டு முக்கிய திரு நாட்களில் அபிஷேகம் கொண்டாடுவது இந்த ஆயிரங்கால் மண்டபத்தில்தான். ஒன்று ஆனித் திருமஞ்சனம் மற்றது மார்கழி மாத ஆருத்ரா தரிசனத் திருநாள் ஆகும். மார்கழி திருவாதிரைக் காலங்களில் ஒன்பதாம் நாளில் பொன்னம்பலத்திலிருந்து மூலவரான நடராஜப் பெருமான் ஆயிரம்கால் மண்டபத்திற்கு எழுந்தருளி, பத்தாம் நாளான விடியற்காலையில் அபிஷேகம் கொண்டருளல் பெற்று, பின் அன்று பிற்பகலில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தரிசனம் தந்து அங்கிருந்து புறப்பட்டு "நடனப்பந்தி" என்ற மண்டபம் வழியே நடனமாடி பொன்னம்பலத்துக்கு மீண்டும் எழுந்தருளும் அனுக்கிரக திருத்தரிசனக் காட்சி ஒவ்வொரு ஆன்மாவுக்கும் எண்ணற்ற உயிர்ப்பூட்டும். பேரருள் கிட்டும்.

ஆயிரங்கால் மண்டபத்தில் பிரகாரத்தில் பல்லாயிரக் கணக்கில் கூடி நின்று இறை தரிசனம் பெறும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. மூலவரே வெளியே திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு தரிசனம் செய்யும் பெருமை இந்தத் திருத்தலத்தில்தான் உண்டு. முன்பு சாதிக்கட்டுப்பாடுகள் அமைக்கப்பட்டிருந்த காலத்திலும் மூலவரான நடராஜப் பெருமானைத் தரிசிக்கும் பாக்கியம் எல்லோருக்கும் கிட்டும்படி இந்தத் தரிசனம் அமைந்து இருந்தது.

ஆனி மாதம் முதுவேனில் காலத்தின் உக்கிரமான காலமாகும். பங்குனி உத்தரம், சிவபெருமானின் திருமணத்தால் விசேடம் பெறுவதுபோல ஆனி உத்தரம் சிதம்பர நடராஜர் தரிசனத்தால் விசேடம் பெறுகிறது.

உத்தரம் என்பது சிம்ம, கன்னி இராசியில் அடங்கும். இரண்டு நட்சத்திரங்கள் உள்ள மண்டலம் ஆகும். இவ்விரண்டு நட்சத்திரங்களும் சேர்ந்து சிறப்பாய் அமைந்து நற் பயன்களைக் கொடுக்கும். அன்றைய தினம் நடராஜப் பெருமானை வழிபட்டு அவரது அருளினைப் பெறலாம்.

புகழ் பூத்த ஆலயங்களில் ஆறுகாலம் பூசைகளுக்கு சமனானது ஆனி மாதப் பூசை. தில்லை சிதம்பரநாதனும் சிவகாமி அம்மையும் விசேடமாக தேரேறி வீதியுலா வருவது மார்கழியிலும் ஆனியிலும் ஆகும். ஆனால் பக்தர்கள் இரதோற்சவ மறுநாள் காலை அம்மை, அப்பன் திவ்விய தரிசனத்துக்காக ஆசார சீலராகி ஆலயத்துக்கு வந்து வணங்குவர். இத்தினத்தில் சகல ஆலயங்களிலும் விசேட அபிடேக ஆராதனைகள் நடைபெறும். முறைப்படி விரதம் அனுட்டித்து பக்தர்கள் குறைவிலா வாழ்வை நிறைவாகப் பெற முடியும். சகல பாக்கியமும் கிடைக்கும்.

-வி. செல்வரத்தினம்-

*ஏழ்மையிலும் நேர்மை இறைவனுக்கு பிடித்தமான செயல்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| திருமதி நவரட்ணம் நினைவாக | கொக்குவில் | 20000. 00 |
| திரு வடிவேல் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சிவநேசன் தயாமதி | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| சி. காந்திமதி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வனிதன் பத்மலோஜினி | கொக்குவில் | 10000. 00 |
| திரு கந்தையா குடும்பம் | சுழிபுரம் | 2மூடை நெல் |
| திரு சிவபாலசுந்தரம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| பி. றொசான் | பிரான்ஸ் | 5000. 00 |
| வே. திரிசா | வரணி | 1000. 00 |
| S. மயில்வாகனம் | வரணி | 2000. 00 |
| ஆ. கதிர்காமநாதன் | கனடா | 2மூடை அரிசி |
| நி. கஜனி | இணுவில் | 1000. 00 |
| சி. சதீஸ்குமார் | ஊரெழு கிழக்கு | 1புட்டி அரிசி 1000. 00 |
| திரு குணரெட்ணம் குடும்பம் | மானிப்பாய் | 500. 00 |
| சி. சிவஜா | கனடா | 5000. 00 |
| S. அஷானி | கோப்பாய் | 1000. 00 |
| R. றொசாந்தமோகன் | மல்லாகம் | 1000. 00 |
| ஐங்கரன் யுஷான் | சண்டிலிப்பாய் | 50000. 00 |
| ச. மகாலெட்சுமி | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| S. செல்வன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| நா. கலாநிதி | மூளாய் | 6000. 00 |
| மோ. கமலலோஜினி | உடுவில் | 1000. 00 |
| வல்லிபுரம் கமலேஸ்வரி | வவுனியா | 40000. 00 |
| சரவணன் பிரசாந்தன் | லண்டன் | 10000. 00 |
| S. ஆரணி | நவாலி | 1000. 00 |
| பா. சுகந்தினி | மந்துவில் | 5000. 00 |
| திரு இராமையாச்செட்டியார் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1500. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| கு. சுபாகரன் | கொடிகாமம் | 25kg பருப்பு, 140kg அரிசி 7000. 00 |

*பிறரைக் காட்டிலும் அதிகமாக அறிந்துகொள்ள முயலுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தேவகி அருமைச்சந்திரன் | பருத்தித்துறை | 10000. 00 |
| சு. பத்மநாதன் | பலாலி | 1000. 00 |
| க. ரஞ்சிதமலர் | கனடா | 10000. 00 |
| விசாலரெட்ணம் நினைவாக | ஊரிக்காடு | 15000. 00 |
| நல்லையா தவமணி | அச்சுவேலி | 5000. 00 |
| விஜய் அருவி | மூத்தவிநாயகர் கோவிலடி (சுவிஸ்) | 5000. 00 |
| ச. நிஷாந்தன் | குடத்தனை | 10000. 00 |
| சி. ஆதவன் | இணுவில் | 500. 00 |
| ர. மனோஜா | கனடா | 5000. 00 |
| ச. கௌரிசங்கர் | சுன்னாகம் | 1மூடை அரிசி |
| P. நடராஜா | கல்முனை | 1500. 00 |
| சு. சுரேந்திரரட்ணம் | கோப்பாய் | 5000. 00 |
| க. தங்கராசா | இமையாணன் | 1000. 00 |
| த. தயாபரன் | சுவிஸ் | 25000. 00 |
| த. வைத்திலிங்கம் | திருநெல்வேலி | 5000. 00 |
| வ. சச்சிதானந்தன் | திருநெல்வேலி கிழக்கு | 10000. 00 |
| கு. பிரியந்தி, கு. பிரி[illegible]கி | இத்தாலி | 11000. 00 |
| கு. சிவதர்ஷினி | பருத்தித்துறை | 2000. 00 |
| நா. குகதாசன் | லண்டன் | 10000. 00 |
| கபிலன் சதாசிவம் | உரும்பராய் | 10000. 00 |
| ம. கல்யாணி | புன்னாலைக்கட்டுவன் | 3000. 00 |
| பொ. தங்கமுத்து | அச்சுவேலி | 3000. 00 |
| S. புஸ்பலோஜினி | நுவரெலியா | 5000. 00 |
| மா. குலசேகரம் | கோப்பாய் | 10000. 00 |
| சு. யசிதரன் | குப்பிளான் | 5000. 00 |
| லோ. வைஸ்ணவி<br>லோ. கல்பனா<br>பா. லோகநாதன் | அச்சுவேலி | 15000. 00 |
| K. வேலாயுதம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| R. கம்ஷனா | கனடா | 25000. 00 |
| கோ. சண்முகப்பிரியன் | ஊரெழு | 2000. 00 |
| கி. சவர்னா | நோர்வே | 10000. 00 |
| ப. சிவானந்தசர்மா | கோப்பாய் | 3000. 00 |
| N. சரஸ்வதி | கொக்குவில் | 2000. 00 |
| வக்சலா கோணேஸ்வரன் | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| க. அருளையா | அச்செழு | 10000. 00 |
| திருமதி ரவீந்திரன் | கல்முனை | 5000. 00 |
| பவானி சித்திரவடிவேல் | சாவகச்சேரி | 2000. 00 |

***துன்பங்களுக்கு இடையில்தான் வாய்ப்புக்கள் ஒளிந்திருக்கின்றன.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Dr சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 12000. 00 |
| ச. ஆதீசன் | லண்டன் | 6000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 13000. 00 |
| சி. சபேசன் | லண்டன் | 2000. 00 |
| அ. நர்த்தனா, ம. அதீதன் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| திருமதி திவாஹரி சுதர்சன் | கனடா | 10000. 00 |
| திருமதி த. கந்தசாமி | நீர்வேலி | 10000. 00 |
| வ. இரத்தினசிங்கம் | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| சுரேஸ்குமார் சுபச்செல்வி | பருத்தித்துறை (சுவிஸ்) | 5000. 00 |
| க. சிவராஜா | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| திரு ஐயாத்துரை குடும்பம் | மல்லாகம் | 500. 00 |
| ம. சுரேந்திரன் | கல்கிசை | 1000. 00 |
| திரு செல்வரட்ணம் குடும்பம் | சுழிபுரம் | 1000. 00 |
| வே. சுகுமார் | பருத்தித்துறை | 2000. 00 |
| த. ஸ்ரீதரன் | உரும்பராய் | 1000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | 1மூடை அரிசி |
| புனிதவதி சிவசுப்பிரமணியம் | சுழிபுரம் | 1000. 00 |
| திருமதி பி. மதனகௌரி | நெல்லியடி | 1k பருப்பு, 1 புட்டி அரிசி |
| சுசீந்திரன் தேவகுமாரி | அச்சுவேலி (சுவிஸ்) | 30000. 00 |
| க. அமுதன் | நெல்லியடி | 10000. 00 |
| கு. கிருபாகரராசா | ஆவரங்கால் | 10000. 00 |
| S. நாகராஜா | அவுஸ்திரேலியா | 1மூடை அரிசி |
| கி. யதுஷாயினி | ஊரெழு | 1000. 00 |
| D. துவிகன் | ஊரெழு | 500. 00 |
| ம. அருள்நங்கை | சுவிஸ் | 5000. 00 |
| த. மோகனதாஸ் | கொழும்பு (புங்குடுதீவு) | 5000. 00 |
| சிவகாந்தன் தனுஷிகா | நவக்கிரி | 25000. 00 |
| S. சரவணன் | வல்வெட்டித்துறை | 500. 00 |
| நி. கிருத்திக் | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| யோ. கேதீசன் | திக்கம் | 5000. 00 |
| சோ. பரமநாதன் G.S | குப்பிளான் | 2000. 00 |
| திரு கரன் | இணுவில் | 1620. 00 |
| சு. ஆர்த்தனா | திருநெல்வேலி | 1000. 00 |
| பா. பாலபத்மன் | [illegible]லாகம் | 500. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் பருத்தித்து[illegible] | [illegible]றல் செயற்பாட்டிற்காக) | 10000. 00 |
| கு. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. பார்க்கவிதேவி | தாவடி | 2000. 00 |
| திருமதி நவரட்ணம் நினைவாக | கொக்குவில் | 20000. 00 |

***நீ உன் சிறகை விரிக்கும்வரை நீ எட்டும் தூரம் யார் அறிவார்?***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பா. அன்னஞானம் | சுழிபுரம் | 500. 00 |
| பரமேஸ்வரி மூலம் தாரணி உதயகுமார் | சுவிஸ் | 15000. 00 |
| இ. திருச்செந்தூரன் | முரசுமோட்டை | 6000. 00 |
| இ. தயாபரன் | முரசுமோட்டை | 6000. 00 |
| சி. அபிஷாதன் | உரும்பராய் | 1000. 00 |
| விக்னேஸ்வரன் கந்தசாமி | காரைநகர் | 5000. 00 |
| க. இராஜேஸ்வரி | கரவெட்டி | 20000. 00 |
| உஷாதேவி நினைவாக | கெருடாவில் | 3000. 00 |
| மா. குலசேகரம் | கோப்பாய் | 4500. 00 |
| செல்வி காமாட்சி ஆறுமுகம் | இமையாணன் | 50000. 00 |
| த. கலைவாணி | வியாபாரிமூலை | 500. 00 |
| குமாரசாமி சோமசுந்தரம் | கொழும்பு | 5000. 00 |
| S. நடேசன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| விஜயலெட்சுமி குடும்பம் | மானிப்பாய் | 5000. 00 |
| கு. ரங்கநாதன் | இணுவில் | 500. 00 |
| கோ. ருத்திரா | மானிப்பாய் | 11500. 00 |
| T. பத்மதீபன் | உரும்பராய் | 2000. 00 |
| சி. சிவனேசன் | தாவடி | 5000. 00 |
| திரு கதிரித்தம்பி ஆசிரியர் மூலம் புண்ணியமூர்த்தி முத்தாச்சி நினைவாக | இடைக்காடு | 10000. 00 |
| திரு பூபாலசிங்கம் குடும்பம் | ஊரெழு | 1000. 00 |
| ஜெ. தனுஜா, அ. கஸ்தூரி | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| ப. வசந்தி | கோப்பாய் | 1000. 00 |
| கஜன் தருண் | இணுவில் | 2000. 00 |
| ச. சங்கீதா | நெல்லியடி | 1மூடை அரிசி |
| S. ஆதீஷன் | சிறுப்பிட்டி | 500. 00 |
| ம. டொன்பஸ்கோ | மாதகல் | 3000. 00 |
| நிவேதா புனிதராசா | கனடா (துவிச்சக்கரவண்டி) | 20000. 00 |
| கைலைநாதன் ஆரபி | சுதுமலை (துவிச்சக்கரவண்டி) | 20000. 00 |
| க. செந்தில்நாதன் | பிரான்ஸ் (துவிச்சக்கரவண்டி) | 20000. 00 |
| திரு சிவசம்பு குடும்பம் | கொழும்பு | 2500. 00 |
| சு. மகாராஜன் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சி. ஸ்ரீகரன் | பிரான்ஸ் | 10000. 00 |
| ஸ்ரீ. அபிலஷா | பிரான்ஸ் | 10000. 00 |
| செ. சரண்யா | இணுவில் | 1000. 00 |
| R. கலைச்செல்வி | இணுவில் மேற்கு | 1000. 00 |

(தொடரும்...

***சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தித்திக்கும் திருவாசகத் தேன்

– திருமதி சந்திரலீலா நாகராசா அவர்கள் –

மாணிக்கவாசகரின் திருவாசகம் சைவ மெய்யன்பர்களுக்கும், தமிழறிஞர்களுக்கும் கிடைத்தற்கரிய பேரானந்தத்தை தரவல்ல ஒப்பற்ற தமிழ் நூலாகும். சைவ சமயிகள் ஒரு முறையேனும் இத் திருவாசகத் தேன் சுவையை அருந்தி இன்புறல் வேண்டும். ஓதுபவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு கல்மனத்தையும் கரைந்து உருக்கும்படி செய்யும் ஈடு இணையற்ற ஒப்பற்ற நூலாகும். அண்மைக் காலத்து அருட்பெரும் சோதியாகிய வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகள்

"சாத்திரங்களில் சிறந்தது திருமந்திரம்
தோத்திரங்களில் சிறந்தது திருவாசகம்"

என்று அன்பர்களுக்கு அறிவுறுத்தினார். திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என பெரியோர் புகன்றதை மறுப்பதற்கில்லை. இத்தகைய அரும்பெரும் சிறப்பு வாய்ந்த திருவாசகத்தில் ஐம்பத்தொரு பதிகங்களும், ஐம்பத்தியாறு பாடல்களும் மாணிக்க வாசகரினால் தில்லை என்னும் சிதம்பரத்தில் அருளப்பட்டது. சிவபெருமான் அந்தணர் உருவில் சென்று திருவாசகத்தை ஓதச் செய்து, திருக்கோவையாரையும் பாடச்செய்து அவற்றைச் சுவடியில் எழுதிக்கொண்டார். மாணிக்கவாசகர் சொல்ல அழகிய சிற்றம்பலம் உடையான் எழுதியது எனக் கைச்சாத்திட்டும் கனகசபையின் பஞ்சாக்கரப்படியில் வைத்து மறைந்தார். மறுநாட் காலை சுவடியைக் கண்ட தில்லைவாழ் அந்தணர்கள் ஆச்சரியம் மேலிட்டவாறு பாடலின் பொருளைச் சொல்லுமாறு வேண்ட அவரும் தில்லைக்கூத்தனைக் காட்டி "இவனே பொருள்" எனக் காட்டிவிட்டு தனது முப்பத்தியிரண்டாவது வயதில் ஆனி மாத மக நட்சத்திரத்தன்று இரண்டறக் கலந்தார். அன்றே அன்னாரின் குருபூசைத் தினமாகும்.

சிவபுராணம், கீர்த்தி திருவகவல், திருச்சதகம், குயிற்பத்து, அருட்பத்து, குழைத்தபத்து, திருப்பொற்சுண்ணம், அச்சோப்பதிகம் ஆகியன திருவாசகத்தில் இடம்பெறும் சில பதிகங்களாகும். பாடசாலையில் பயிலும் சைவ மாணவர்கள் சிவபுராணத்தை மனப்பாடமாக்கி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் காலைப் பிரார்த்தனையில் ஓதவேண்டும். ஆலயங்களில் பூசை முடிவில் பஞ்சபுராணம் ஓதும் வழக்கமுண்டு. இதில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப் பல்லாண்டு, திருப்புராணம் என்ற ஒழுங்குமுறை வரவேண்டும். மாணிக்கவாசகர் உள்ளம் நெக்குருக பாடியதாலே இதைப் பாடுவோரும், கேட்போரும் மெய்மறந்து ஆனந்தமுறுவர். திருவாசகம் மட்டுமன்றி திருக்கோவையாரையும் அருளினார். இவை இரண்டும் எட்டாம் திருமுறையில் அடங்குவன.

இவர் மதுரைக்கருகேயுள்ள (பாண்டிநாடு) திருவாதவூரில் பிறந்தார். மதுரை மன்னனான அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக விளங்கிய அறிவுச் செம்மல் திருவாதவூரர் ஆவார்.

நேர் வழியில் அடையமுடியாததை ஒருநாளும் குறுக்கு வழியில் அடைந்துவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் கல்வியறிவு, ஒழுக்கம், ஆன்மிகம் ஆகியவற்றைப் பாராட்டிய மன்னன் அவருக்கு "தென்னவன் பிரம்மராயன்" எனும் சிறப்பு பட்டத்தைச் சூட்டினான். பாண்டிநாட்டுப் படைப்பெருக்கத்திற்கு வேண்டிய குதிரைகளை வாங்கி வருமாறு பாண்டியன் பணிக்க, பொன்னுடன் ஆவுடையார் கோயில் எனும் திருப்பெருந்துறைக்குச் சென்றார். அங்கு குருந்தமர நிழலில் குருபரனாக அடியார்கள் புடைசூழ எழுந்தருளி சிவஞானத்தை போதிக்க, தான் வந்த பணியை மறந்து "அடியேனை ஆட்கொண்டு உய்வித்து அருளுக" என வேண்ட இறைவனும் சென்னியில் திருவடிகளைச் சூட்டி ஐந்தெழுத்தை ஓதினார். அவர் விரும்பியபடி இறைவனைக் காணவேண்டுமென்ற அவா நிறைவேறியது. தேனூறும் அவரது பாடல்களிலுள்ள மேன்மையான கருத்துக்கள் உள்ளத்தை உருக்கி சிவநெறியை மக்களிடையே பரவச் செய்வதற்கு அடிகள் செய்த சீரிய தொண்டாகும்.

ஞான மார்க்கத்தை கடைப்பிடித்த அடிகள் தாம் பெற்ற பேரின்ப நிலைக்கு மற்றவர்களையும் வருமாறு யாத்திரைப் பத்தில் பின்வருமாறு பாடுகின்றார்.

"விடுமின் வெகுளி, வேட்கை நோய், மிகவோர் காலம் இனியில்லை
உடையான் அடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோடு உடன் போவதற்கே ஒருப்படுமின்"
அடைவோம் நாம் போய் சிவபுரத்துள் அணியார் கதவதடையாமே
புடைபட்டுருகிப் போற்றுவோம், புயங்கள் ஆழ்வான் புகழ்களையே"

அதாவது கோபம், ஆசையை விடவேண்டும். மேன்மையடையும் காலமிது. நம்மை ஆள்பவனின் திருவடிக்கீழ் ஒன்றுபட்டு சிவபுரத்தை அடைவோம். நம்மை ஆளும் பெருமானின் புகழையே மெய்யுருக எப்போதும் துதிப்போமாக.

திருமூலரும் கூட ஆசையை விட்டு ஆனந்தத்தை அடையுமாறும் ஆசை பெருக, பெருக துன்பமும் கூடுமென்று பாடியுள்ளார்.

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள் ஈசனோடாயினும்
ஆசை அறுமின்கள் ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விட விட ஆனந்த மாமே"

செந்நாப்புலவரும் குறளில்

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்பதன் மூலம் நிலையற்ற வாழ்க்கையில் ஈடுபடாமல் எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடிகளைப் பற்றிப்பிடித்தால் உலக லௌகிய வாழ்க்கையில் வாழாமல் ஆத்மீகமான ஆனந்த வாழ்வை வாழமுடியுமென்றார்.

மாணிக்கவாசகரின் வாழ்க்கை அன்புநெறியை காட்டுகிறது. ஒவ்வொரு பாடலும் கருப்பஞ்சாற்றில் தேன் கலந்து, பால் கலந்து தெவிட்டாத செழுங்கனித் தீஞ்சுவை கலந்து பாடுபவரின் உள்ளத்தையே பக்தியினால் உருகச் செய்வது. திருப்பெருந்துறையில் அருளிய திருச்சதகத்திலுள்ள பாடல்கள் அவரை அடிமைகொண்ட அனுபவம் கூறப்படுகின்றது.

*சந்தேகத்தை எரித்து, நம்பிக்கையை விதைத்துவிடு மகிழ்ச்சி தானாகவே வரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துன் விரையாற் கழற்கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துனைப் போற்றி சயசய போற்றியென்றும்
கைதான் நெகிழ விடேன் உடையாயென்னைக் கண்டுகொள்ளே"

என்னை அடிமையாக உடையவனே! உனது கமலத்திருவடியை அடைவதற்கு உடல் முழுதும் உரோமம் சிலிர்க்க நடுங்கி கைகளை தலைமேற் குவித்து கண்களினின்று ஆனந்த அருவிநீர் சொரிய உடல் வெதும்பி, உள்ளத்தைப் பொய்யான ஒழுக்கத்தினின்று நீக்கி உன்னைப் போற்றி வழிபடுதலின்றி நழுவவிடாது மேற்கொள்வேன். என்னையும் கடைக்கண்ணால் பார்த்து ஏற்றுக்கொள்வாயாக.

திருவுத்தரகோசமங்கையில் அருளப்பட்ட கீழுள்ள பாடல் நீத்தல் விண்ணப்பத்தில் கைவிடாது தாங்குக எனும் மரபிலேயுள்ளது.

"கடையவனே எனைக் கருணையினாற் கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டுடுதி கண்டாய் விறல் வேங்கை தோல்
உடையவனே மன்னுமுத்தர கோசமங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே"

அதாவது உனது பெருங்கருணையால் எளியவனாகிய என்னை வலியவந்தடைந்து அடிமையாக்கி அருளிய இடபவாகனனே! என்னைக் கைவிடலாமோ? வீரம் நிறைந்த வலிமையுள்ள புலியைக் கொன்று தோலை அணிந்திருப்பவனே, நிலைபெற்ற உத்தரகோச மங்கைக்கரசே சடாமுடியையுடையவனே, அடியேன் பிறவித் துயரில் அகப்பட்டு தளர்ந்து போனேன். நீ கைவிட்டால் என்னைத் தாங்குவது யார்? நின் பெருந்தன்மையால் என்னைக் கைவிடாது காத்தருள வேண்டுமென்கிறார்.

உள்ளம் அன்புமயமாகவுள்ள நிலையில் நேசமுள்ளவர் எதைச் செய்தாலும் இறைவன் உள்ளன்போடு ஏற்பான் என்பதை

"தீ தில்லை மாணி சிவகருமம் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் தாதை தனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தேணொக்கம்" என்கிறார்.

சிவஞான சித்தியார் எல்லா உயிர்களையும் நேசித்து அன்புகாட்டிக் கருணை செய்யவேண்டுமென்பதனை,

"ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்" எனத் தெளிவுறுத்து கிறது. திருவாசகமும் இதையே வலியுறுத்துகிறது. வெளிநாட்டவரான கால்ட்வெல் திருவாசகத்தின்பால் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு மொழிபெயர்த்தார்.

மாணிக்கவாசகர் மனநிறைவும் உறுதிப்பாடும் கொண்டதை திருவெம்பாவையில் "எங்கெழிலென் ஞாயிறு எமக்கு"

*இருளான வாழ்க்கை என்று கவலை கொள்ளாதே. கனவுகள் முளைப்பது இருளில்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“யாமார்க்கும் குடியல்லோம், யாதும் அஞ்சோம் வரி புலப்படுத்துகிறது.

எமது அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவற்றை ஒப்படைக்க வேண்டுமென்பதை குழைத்த பத்திலுள்ள பாடல் விளம்புகிறது.

“அன்றேயென்றன் ஆவியும் உடலும் உடைமை யெல்லாமும்
குன்றேயனையாய் யென்னை ஆட்கொண்ட போதே கொண்டில்லையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண்ணன் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே”

வள்ளலாரும் திருவாசகத்தைப் புகழ்ந்துள்ளார்.

“வான் கலந்த மா வாசகா நின் வாசகத்தை நான் கலந்து பாடும்
கால் நற்கருப்பஞ் சாற்றிலே தேன் கலந்து, பால் கலந்து செழுங்கனி
தீஞ்சுவை கலந்தென், ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல்
இனிப்பதுவே கிடைத்தற்கரிய திருவாசகப் பதிகங்களை நாமும்
உள்ளமுருகி நெக்குருகப் பாடி இறைவன் கழல் சரணடைவோமாக.

“ஊழிமலி மாணிக்கவாசகர் திருவாசகம் வாழி”

---

## சுய அனுபவம்

ஒரு இளம் சன்னியாசி ஒரு குருவின் ஆசிரமத்தில் தங்கியிருந்து துறவறம் பற்றி அறிந்துகொள்ள முயன்று வந்தார். ஆனால் அந்த குருவோ எப்போதாவது ஒரு விஷயத்தைச் சொல்வார். அவர் சொல்லும் விஷயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்காது. இதனால் மனம் வெறுத்த அந்த துறவி அங்கிருந்து வெளியேற முடிவு செய்தார்.

ஆனால் அவர் வெளியேறும் முன்பாக அங்கு ஒரு நிகழ்வு நடந்தது. அதன் பிறகு அந்த துறவி அங்கிருந்து வெளியேறவேயில்லை. அதாவது அன்றைய தினம் மற்றொரு இளம் துறவி அந்த ஆசிரமத்திற்கு வந்தார். அங்கிருந்தவர்களுடன் பேச ஆரம்பித்த அவர் பல்வேறு ஆழமான கருத்துக்களை பேசினார். ஆன்மீகத்தின் பல கோணங்களை ஆராய்ந்து ஏறக்குறைய 2 மணிநேரம் பேசினார். அந்த ஆசிரமத்தின் குரு கண்களை மூடியவாறு அவரது பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார். அந்தப் பேச்சைக் கேட்ட இளம் துறவி, குரு என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தார். அவருடன் சென்றுவிட முடிவு செய்தார். அவரது பேச்சைக் கேட்ட அனைவரும் அவரைப் பாராட்டினார்கள்.

பேசி முடித்த அந்த புதிய துறவி அருகேயிருந்த குருவிடம் “தனது பேச்சு எப்படி இருந்தது என்று சிறிது கர்வத்துடன் கேட்டார்”. கண் விழித்த அந்த குரு, “நீ எப்போது பேசினாய்? நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன் 2 மணிநேரமாக நீ பேசாமல் அமர்ந்து கொண்டிருக்கிறாயே” என்றார். “அப்போ இதுவரை பேசியது யார்?” என்று அந்த புதிய துறவி கேட்டார். “சாஸ்திரங்கள் பேசின, நீ படித்த புத்தகங்கள் பேசின, நீ உன் சுய அனுபவத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட பேசவில்லை” என்று குரு சொன்னார்.

இப்படித்தான் பலரும் மற்றவரிடமிருந்து கேட்ட கற்ற விஷயங்களை பேசி வருகின்றனர். சுய அனுபவத்தைப் பேசுவதில்லை. சுய அனுபவமே உண்மையானது.

*எல்லோரும் போகிறார்கள் என்று நீயும் பின் தொடராதே. உனக்கான பாதையை நீயே தேர்ந்தெடு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

(தொடர்ச்சி...

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## 05) பேயுருக் கொண்ட பெருந்தகையார்

"என்ன! என் மனைவி என்றோ கருதினீர்கள் இத் தேவியாரை! நானும் என் மரபினரும் அடிபணிந்து போற்றத் தகுந்த பெருமை வாய்ந்தவர் அல்லவா இவர்! இவரே என் குலதெய்வம், இச்சிறு மகவுக்குப் "புனிதவதி" என இவரது புனிதமான பெயரன்றோ வைத்திருக்கிறேன். ஏன் இப்படிப் பார்க்கின்றீர்கள் என்னை? மனைவியைப் பணிகின்றான்; இவன் பித்தனோ என்னும் எண்ணமா? இவரிடத்தில் நான் கண்ட தெய்வத்தன்மை அல்லவோ இவரைவிட்டுப் பிரியுமாறு செய்தது. நான் பணிவிடை செய்ய வேண்டியவர். எனக்கு பணியாளராகக் கொண்டிருத்தல் ஏற்ற செயலாகுமா? சொல்லுங்கள். இதனாலேயே இவரைப் பிரிந்து சென்று மறுமணம் புரிந்துகொண்டு இங்கு வாழ்ந்து வருகிறேன். உலகம் உய்யத் தோன்றிய உத்தமி இவர். இதில் சிறிதளவும் சந்தேகமில்லை. நீங்களும் வணங்குங்கள் இவரை" மீண்டும் மனைவியை வணங்கி நின்றான். அவர்தம் பெருமையைக் கண்கூடாகக் கண்டவனல்லவா பரமதத்தன்!

அங்கிருந்தவர்கள் திகைப்பெய்தினர். நிகழ்ந்ததை அறியாமல் புனிதவதியார் நாணி ஒரு புறத்து ஒதுங்கி நின்றார். தாம் கனவிலும் நினைத்திராத கணவனது இச் செயல் அவரைத் திடுக்கிடச் செய்தது. அசைவற்ற மரம்போல் நின்றார். மின்னல் போலப் பலப்பல எண்ணங்கள் அவர் உள்ளத்தில் தோன்றின. "இனி நான், இல்லறத்திற்கு ஏற்றவள் ஆகேன். இல்லாளன் இன்றி இல்லறம் நடத்துதல் சரியா? இந் நிலையில் நான் செய்யக்கூடியது என்ன?" என்று இறைவன் திருவருள் துணைநாடி இறைஞ்சி நின்றார்.

இளமை விளையாட்டுப் பருவத்தில் அரும்பி அதுநாள்வரை வளமுற வளர்ந்து வந்த இறைவழிபாட்டுணர்ச்சி, அன்று அவரது உள்ளத்தில் மலரப்பெற்றது. திருமுகம் தெய்வ ஒளி வீசியது. சித்தமலம் அறுத்தோர் செல்லும் பக்தி நெறி, அவ் அம்மையாரின் வாழ்க்கை நெறி யாகத் தோற்றம் அளித்தது.

"மெய் என மயக்கித் துயர்க்கடலாழ்த்தும் இப் பொய்யுடல் உறவு இன்றோடு ஒழிந்தது. காதற் பொருளாக மனத்தின் மூலம் கொண்டானுக்கு உரியதாக்கிய இவ்வுடலை, அவனைக் களிப்பித்தற் பொருட்டு ஆடை அணிகளால் அலங்கரித்துப் பேணும் கடமை இனி இல்லை. "எனக்கு இது வேண்டா" என்று இதனோடு கொண்டிருந்த தொடர்பினை உரியவன் உதறிவிட்ட பின்னர் இதனை அழகுபடுத்தல் வேறு எவர் பொருட்டு?" எனப் பலபல எண்ணினார் புனிதவதியார். இறைவன் பற்றின்றி வேறு பற்றுச் சிறிதும் இன்றி வாழ்ந்த மங்கையர்க்கரசியார்க்குக் கிடைத்த இல் வாழ்க்கை விடுதலை, கூட்டில் அடைக்கப்பட்டிருந்த பறவைக்கு கிடைத்த விடுதலை போன்று பெரு மகிழ்ச்சியைத் தந்தது. இறைவன் திருவருட்பேற்றினை வியந்து போற்றினார் மாதரசியார்.

*நம்பிக்கை இழந்தவன் வெல்வது கடினம். நம்பிக்கையுடன் இருப்பவன் வீழ்வது கடினம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்தை அடி ஏத்தும் இன்பநெறி பெற்றேன். பிறவியின் பயனும்
பெற்றேன். இனி இவ்வுடலைக் காண்போர் அருவருக்குமாறு
பேயுருக் கொண்டு திரிவேன். சிவன் சேவடி சேரும் செந்நெறி
செல்வேன்" என்று உறுதிபூண்டு எக்களிப்போடு பித்தம் பிடித்தார்போல் அவ் இடத்தினின்றும் அகன்றார்.

பரமனடியே பற்றெனக் கொண்ட முத்திநெறியில் தலைப்பட்ட புனிதவதியாரின் வாழ்க்கை, உலக நடையினின்றும் முழுதும் மாறுபடுவதாயிற்று. உடல் வற்றி என்புரு வெய்தியது. "பேயுருவோ இது!" என உலகினர் பேசுமாறு தலைவிரிகோலமாய் நின்றார் அவர். "பேயரே எனக்கு யாவரும்; யானும் ஓர் பேயனே எவர்க்கும்! இது பேசி என்? பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே" என இயம்பினார் அடியார் ஒருவர். அவ்வாறே பிறப்பறுக்கும் பெருமான்றன் பெய்கழல் தேடிப் பேயாயலைந்தார் பெண்ணரசியார். பாலர் உன்மத்தர் பிசாசர் பண்புகள் என நூல்கள் கூறும் ஞானியரின் பண்புகளே அம்மையாரின் பண்புகளாய் அமைவதாக ஆயிற்று.

"ஈசனை என்று காண்பேன்! இன்புருவான இறைவனது எழிலார் கழலை எய்துநாள் எந்நாளோ!" என இரவும் பகலும் அவ்வம்மையார் திருவுள்ளம், ஈசன் அருளையே நாடி, பூவிற் பொலியும் மதுவையுண்டு மயங்கி நிற்கும் வண்டுபோல் அவன் பொன்னடிப் போதிற் பொருந்தி நின்றது. பக்தி மேலீட்டால் பரமனுறையும் கோயில் பல பணிந்து ஞானக் கருவூலமாக விளங்கும் நற்றமிழ்ப் பாக்கள் பல பாடித் துதித்து, முடிவில் இடையறாது என்றும் அவனடி சார்ந்து நிற்கும் பேறு பெற்றார் ஞானத்தாய்.

ஞானத் தாயின் அற்புதப் பாக்களில் சிலவற்றைப் பார்க்கலாம். சைவ சமயத்தில் முதலில் தேவாரம் பாடியவர் காரைக்கால் அம்மையார். அவரது பாடல்கள் அற்புதமானவையாக அமைவதுடன் இலகுவில் பொருள் எளிதில் விளங்கும் கடவுள் இயல்பினைக் காட்டும் ஞானப்பொருள் நிறைந்தனவாகும்.

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பதிடர்?"

"அறிவானுந் தானே, அறிவிப்பான் தானே
அறிவால் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப் பொருளும் தானே, விரிசுடர் பாராகாசம்
அப் பொருளும் தானே அவன்"

"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவோன் உம்பிரான் என்பார்கட் கென்உரைப்பேன்
எவ்வுருவோ நின் உருவம் எது?" (அற்புதத் திருவந்தாதி)

*மனிதனை மாற்றி அமைக்கும் விதி அவனது ஒழுக்கமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவேந்தர் வளர்த்த முத்தமிழ்மொழி, பாவேந்தர் பலரால் பாதுகாக்கப்பட்டது! சங்ககாலம் என்று சொல்லப்படும் கன்னித்தமிழ்கழகக் காலத்தில் தமிழ் வளர்ச்சி தலைசிறந்து விளங்கியது. ஆனால் அக்காலத்துக்குப்பின் தக்கநிலையிலிருந்து தளர்ந்தது! தளர்ந்த தமிழை மீண்டும் வளர்ந்த தமிழாக்க - வளரும் தமிழாக்க - கன்னித்தமிழ் வளர்த்த காரைக்கால் அம்மையார் தோன்றினார்.

முத்தமிழிலும் மூத்து நின்ற காரைக்கால் அம்மையார் மூன்று நூல்களை வழங்கினார். அவை அற்புதத் திருவந்தாதி, திருஇரட்டை மணிமாலை, மூத்த திருப்பதிகங்கள் என்பனவாகும்.

அற்புதத் திருவந்தாதி தமிழில் முதலில் தோன்றிய அந்தாதியாகும். இரட்டை மணிமாலையும் தமிழில் தோன்றிய முதல் இரட்டை மணிமாலையாகும். இவருடைய மூத்ததிருப்பதிகங்களும் பதிகங்களில் முந்தியனவாய் விளங்குவதனால் அப்பெயர் பெற்றன. மூன்று நூல்களுமே முத்தமிழ் மொழியில் தோன்றிய முதன்மை நூல்கள் ஆகும். கட்டளைக் கலித்துறை என்னும் பலவகையைக் கண்டளித்தவரும் காரைக்கால் அம்மையார்தான். கலிங்கத்துப்பரணி போன்ற நூல்கள் பிற்காலத்தில் தோன்றக் காரணமாக இருந்தவரும் காரைக்கால் அம்மையார்தான். "பண்கெழப்" இசைத் தமிழைப் பரப்பிய அம்மையாரை, பைந்தமிழ்க் கடவுளாகிய சிவபெருமான், தன் பாதத்தின் கீழிருந்து பாட வைத்தான். அப்பதவி அம்மையாருக்கு அரசனால் அளிக்கப்பட்ட நிலையான பதவி, நீங்காத பதவி, எந்த அடியாரும் பெறாத இந்தப் பேறு அம்மையாருக்கு மட்டுமே உண்டு. அறுபத்து மூன்று நாயன்மார்களில் அமர்ந்தநிலையில் வைக்கப்பட்டுள்ள ஒரே ஒருவர் காரைக்கால் அம்மையார் என்பது சிறப்பானதாகும்.

செந்தமிழை இவ்வாறு வளர்த்த அந்தச் சிவனடிச் செல்வி, சைவத்தையும் பாதுகாத்தார். சமண, பௌத்த மதங்களால் இருள் சூழ்ந்த சைவத்தை ஒளிபெறச் செய்த ஒப்பற்ற புரட்சியாளர் காரைக்கால் அம்மையார்.

நங்கையருள் சிறந்தவராய், நால்வர்க்கும் முந்தியவராய்த் திகழ்ந்த காரைக்கால் அம்மையாருடைய காலத்தை மிகப் பெரும்பாலோர் கி.பி. ஆறாம் நூற்றாண்டென அறிவித்துள் ளார்கள். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தர், "அம்மையார் தலையால் நடந்த அந்தத் திருப்பதியில் என் அடிகள் பதிதல் கூடாது" என்று அஞ்சிய காரணத்தைக் காட்டி, ஆராய்ச்சியாளர்கள் அம்மையார் காலத்தை ஆறாம் நூற்றாண்டு என்றார்கள். ஆனால் ஞானசம்பந்தர் காலத்துக்கு ஒரு நூற்றாண்டுக்கு முந்தித்தான், அம்மையார் வாழ்ந்தார் என்பது உறுதியும் தெளிவும் அற்றது. கால ஆராய்ச்சி ஆய்வாளர்களுக்கே உரியது. அடியவர்களுக்கு அவசியமில்லை என்பது அடியேன் கருத்தாகும்.

அம்மையாரின் நூல்கள் பதினோராம் திருமுறையைச் சார்ந்தனவாகும். அவர் தம் அரிய நூல்களுக்குப் பலர் உரை எழுதியுள்ளார்கள். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு வி. கலியாணசுந்தரனார், திருமலைராயன், பட்டினத்தைச் சேர்ந்த அருணாசல முதலியார், கலைமகள் ஆசிரியர், கி. வா., புலவர் த. இராமலிங்கம். புலவர் தமிழ்வேள் போன்றோர் ஆவர்.

*ஒருவர் உன்னைத் தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மையாருடைய பாடல்களை பிரெஞ்சு மொழியில் "லெயோன் சோழன்" என்பவர் மொழி பெயர்த்துள்ளார். பெரியோர் போற்றும் அளவுக்கு பெருமையுடைய அவர் நூல்கள், செந்தமிழ்ச் சிறப்புக்கும், சிவநெறிச் செழிப்புக்கும் உரியனவாகும்.

அடியவர்கள் வரலாற்றை ஆதாரத்துடன் எமக்குத் தந்தவர் சேக்கிழார் பெருமான். அவரது திருத்தொண்டர் தொகையில் காரைக்கால் அம்மையார் புராணத்தின் தொடக்கம்

மானம்மிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனம் இல் சீரப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல் வளை திரைசுமந்து கொண்டுஏறி மண்டுகழிக்
கானல் மிசை உலவு வளம் பெருகு திருக் காரைக்கால்

என்று ஊர் பெருமையை வானளவு புகழ்ந்து புனிதவதியாரின் கதையை பேசத் தொடங்குகிறார். சிவபெருமானினால் "அம்மையே" என அழைக்கப்பட்டவர். சிவனிடம் கேட்ட வரம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும்
பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும்
வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது உன்
அடியின் கீழ் இருக்க என்றார்.

திருவாலங் காட்டில் இறைவனின் அடியில் இருந்து, இறை நடனத்தைக் காணும் பேறுபெற்ற தமிழ்ப் பெண் கவியரசி காரைக்கால் அம்மையார் நம்மிடம் கேட்பது ஒன்றுதான். "இறவாத இன்ப அன்பு".

(தொடரும்...

---

நாம் எத்தனை திட்டுதலுக்குத் தக்கவர்கள் என்பது நமது உள் மனதுக்குத்தான் தெரியும். ஒருவேளை நம்மைத் திட்டுபவர் நாம் செய்த சிறிய தவறுக்காகத் திட்டிக்கொண்டிருக்கலாம் ஆனாலும் முன்பு நாம் செய்த தவறுகள் இதைவிடப் பெரியவை என்பது நமது அந்தரங்கத்துக்குத்தான் தெரியும். இந்த நிலையிலுள்ள நாம் மற்றவர் நம்மைத் திட்டுவதைக் கேட்டு கோபிக்க நியாயம் ஏது? நாம் தப்பே பண்ணாதபோது பிறரைக் கோபிக்கலாமா என்றால், அப்படித் தப்பே பண்ணாத நிலையில் நாம் அன்புமயமாகி விடுவோம். அடுத்தவர் மேலே கோபமே ஏற்படாதே! தமது மனச்சாட்சிக்குத் தெரிந்த உண்மையிலும், தன்னுடைய சத்தியவாக்கிலும் எவன் உறுதியுடன் இருக்கின்றானோ, அது தொடர்பாக தனக்கு ஏற்படக்கூடிய அவதூறுகளையும் அவமானங்களையும் ஏற்கத்தக்க மனநிலையினை அவன் பெற்றுவிடுகிறான்.

*காயமில்லாமல் கனவு காணலாம். ஆனால் வலி இல்லாமல் வெற்றி காணமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் வாக்கில் நாய்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனெடி பாப்பா.

-பாரதியார்.

விலங்குகளுள் நாய் மனிதரால் மதிக்கப்படுவது; அதன் நன்றியுணர்வு, சேவை செயற்பாடு விழுமியம் வாய்ந்தவை. வீட்டுப் பிராணிகளில் அதுவும் ஒன்று. உலகெங்கும் நாயின் பயன்பாடு மிகப்பல. மேலைநாடுகளில் அவற்றிற்கு நினைவுச் சின்னங்கள் உண்டு. நாயின் வீரம், திறன்பற்றி நூல்களும் எழுந்துள்ளன. பசுவினங்கள் பலவற்றை விலங்கியற்துறை உருவாக்கி உள்ளதைப்போன்று பல இன நாய்களையும் விருத்தி செய்துள்ளமை உயிரின மாற்ற வரலாற்றின் ஒருதுறை எனலாம். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற மண்டலங்களில் பல இன நாய்களைக் கண்டு மனித இனமே வியப்படைகின்றது. இஃதேபோல நாயின் சாதனைகளும் பல திறப்பட்டன. உதாரணமாக நாயின் உபயோகத்தில் இரண்டைக் குறிப்பிடலாம். வட அமெரிக்காவின் வடக்கேயமைந்த பனிநிறைந்த டொறண்டராவில் வண்டிகளை இழுத்துச் செல்ல நாய்களைப் பயன்படுத்துகிறார்கள். இன்னுமொரு மனித சேவை மிகப்பிரயோசனம் ஆனது. கண் பார்வை இல்லாதவர்களை எங்கும் பாதுகாப்பாகக் கூட்டிச்சென்று வழிகாட்டுவது இதற்குப் பழக்கப்பட்ட நாய்களின் கழுத்தோடு சேர்ந்த பகுதியிற் தோலால் வார் போட்டு (உறுதியான) கைகளிலே பிடித்துக்கொண்டு விழிப்புணர்வற்றோர் பாதுகாப்பாகப் போய் வருகிறார்கள். சிறப்பாகப் பஸ்கள், தொடர் வண்டிகள், நிலக்கீழ் ஓடும் பாதாள ரெயில்கள், ட்ராம் கார்கள் எல்லாவற்றிலும் கட்புலன் இல்லாதோர் பயணஞ்செய்ய நாய் நல்ல தோழனாய்ப் பயன் தருகிறது. இப்படியான நாய்களின் காலத்தில் மணிவாசகப் பெருந்தகை, பாரதியார், வாழும் வாய்ப்பு இருந்தால் எப்படியெல்லாம் போற்றி இருப்பார்கள் என்று எம்மாற் கற்பனைபண்ணிக்கூடப் பார்க்கமுடியவில்லை. மற்றவர்களைப் பார்த்து நாம் நாயே பேயே எனப் பேசுகின்றோம். நாயென்ன அவ்வளவு இழிந்த பிறவியா. நாயைப் போன்றோர்களுடன் சிநேகம் கொள் என நாலடியார் நம்மை வழிப்படுத்துகிறார்.

யானையனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

யானையைப் போன்றவர்களின் நட்பை விலக்கி, நாயைப் போன்றவர் நட்பை தழுவிக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் பல காலம் பழகியபோதும் ஒரு சிறு தவறுக்காகத், தன்னைப் பேணிய பாகனையே யானை கொன்றுவிடும். ஆனால் தன்னை வளர்த்த எசமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எறிந்த வேல் தன் உடலிற் பட்டு நிற்கும்போதும் நாய் தன் வாலை ஆட்டி நன்றி உணர்வோடு நிற்கும் என்பது இப்பாடலின் கருத்து ஆகும்.

நாம் மற்றவர்களை இகழ்வதற்காகவே நாயே, பேயே என்று பேசுகின்றோம். அதைப் பற்றியும் வள்ளலார் ஒரு பாடல் தந்துள்ளார்.

ஈ என்று நான் ஒருவர் இடம்நின்று கேளாத
இயல்பும்என் னிடம் ஒருவர் ஈ
திடு என்ற போதவர்க் கிலையென்று சொல்லாமல்
இடுகின்ற திறமும் இறையாம்
நீ என்றும் எனைவிடா நிலையும்நான் என்றும்உன்
நினைவிடா நெறியும் அயலார்
நிதி ஒன்றும் நயவாத மனமும் மெய்ந் நிலைநின்று
நெகிழாத திடமும் உலகில்
சீ யென்று பேய் என்று நாய் என்று பிறர்தமைத்
தீங்குசொல் லாத தெளிவும்
திரம்ஒன்று வாய்மையும் தூய்மையும் தந்துநின்
நவடிக் களாக்குவாய்
தாய் ஒன்று சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தவம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே.

-திருஅருட்பா முதற்திருமுறை 4.

சிறப்பான குண, அற்ப பண்புகள் பற்றிப் பேசும் இராமலிங்க சுவாமிகள் தொட்டுக் காட்டும். "உலகில் சீயென்று, பேய்என்று நாய் என்று பிறர் தமைத் தீங்கு சொல்லாத தெளிவும் தருவாய்" என்ற பாவடியை நாம் மனதிற் சதா சிந்தித்துப் பிறரைத் தூற்றாமற் பேணுவோமாக.

மணிவாசகப் பெருந்தகை தன் சிறுமையை நாயோடு ஒப்பிட்டுப் பாடிய பாடல்கள் திருவாசகத்தில் நிறைய வருகின்றன. இதை நைச்சிய பாவம் என வடமொழியிலும், தற்சிறுமை எனத் தமிழிலும் (தென் மொழியிலும்) கூறுவார்கள். இந்தப் பாவனையிற் பட்டினத்தடிகளாரும் நாயைப் பிரயோகித்துப் பாடிய சில பாடல்களை இனிச் சிந்திப்போம்.

வரிக்கோல வேல்விழி யாராது ராக மயக்கிற்சென்று
சரிக்கோது வேனெழுத் தஞ்சுஞ் சொலேன்றமி யேனுடலம்
நரிக்கோ கழுகு பருந்தினுக் கோவெய்ய நாய்தனக்கோ
எரிக்கோ விரை யெதுக்கோ விறை வாகச்சி யேகம்பனே.

வேல்விழி - வேல் போன்ற கண், வரிக் கோலம் - செவ்வரிபடர்ந்த கண், அனுராகம்-காமம்

*சிக்கனமும் சேமிப்பும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரு கருவிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்காஞ்சியில் எழுந்தருளி உள்ள ஏகாம்பர நாதனே! செவ்வரி படர்ந்த அழகிய வேல் போன்ற கண்களை உடைய பெண்களது காம மயக்கத்திற் சிக்கி அவர்களோடு விளையாடுவதற்காக அவர்களைப் புகழ்ந்து பேசுவேன். ஆனால் உனது ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதமாட்டேன். அப்படியான எனது உடம்பு நரியினுக்கோ நாயினுக்கோ நெருப்பினுக்கோ மற்று எதனுக்கோ உணவாகும். காம எண்ணங்களை இல்லாமற் செய்வது பஞ்சாட்சரம் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். நற்றுணையாவது நமச்சிவாயவே என்பது அப்பர் வாக்கு.

எத்தனையோ பிறவிகளை இந்த உயிர் எடுக்கின்றது. அப்பிறவி வரிசையில் நாயாய்ப் பிறந்தாற்கூடப் பழுதில்லை. ஏனெனில் நாயுடல் தாங்கினால் நல்ல வேட்டையாடித் தன்னை வளர்த்தவனுக்கு நன்மை செய்யும். ஆனால் அன்னை வயிற்றில் தோன்றிப், பின் செல்வந்தர்களாகி, காயாத மரமும், நீர் வற்றிப்போன குளமும், கல் பசுவும் போல எவருக்குமே பயன்கொடுக்காத மனிதர்களை ஏன் படைத்தாய் எனக் கச்சியே கம்பனைக் கேட்கும் பாடல் இதோ.

நாயாய்ப் பிறந்திடின் நல்வேட்டை ஆடிநலம் புரியும்
தாயார் வயிற்றில் நரராய்ப் பிறந்துஎன் சம்பன்னராய்
காயா மரமும் வறளாங்குளமும்கல் ஆவு மென்ன
ஈயா மனிதரை ஏன்படைத் தாய்கச்சி ஏகம்பனே.

நரர்- மனிதர், சம்பன்னர்- பணக்காரர், கல்ஆ- கல்லாற் செய்த பசு.

இந்த மனிதப் பிறவி மற்றவர்க்கு உதவியாய் அமைய வேண்டும். செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் என்பது ஔவைவாக்கு. இதை வள்ளுவரும் மூன்று குறட்பாக்களில் எடுத்துச் சொல்லுகின்றார்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

-குறள் 215.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.

-மேலது 216.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யாளன்கண் படின்.

-மேலது 217.

ஊரின் கண்ணே இருக்கும் மக்களுக்கு தண்ணீர் உதவும் குளம் போலவும், பயன்தரும் மரம் ஊர்நடுவே பழுத்தால் அது மக்களுக்கு எப்படிப் பிரயோசனப்படுமோ அதுபோலவும், மருந்துச் செடிமுழுதும் நோயாளனுக்குப் பயன்படுவது போலவும், செல்வம் பிறர்க்குப் பயன்படவேண்டும் என இப்பாடல்கள் நமக்கு இடித்துரைக்கின்றன. பட்டினத்தாரின் இன்னோர் பாடலை இனிப் பார்ப்போம்.

*பிறரை நம்பி வாழ்பவருக்கு வறுமை என்றும் இருந்துகொண்டே இருக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்க்குண்டு தெண்டு நமக்குண்டு பிச்சை நமனைவெல்ல
வாய்க்குண்டு மந்திர பஞ்சாட் சரமதி யாமல்வரும்
பேய்க்குண்டு நீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி
நோய்க்குண்டு தேசிகன் றன்னிரு ணோக்கங்க ணோக்குதற்கே

தெண்டு- எச்சில் இலை, நமன்- இயமன், பஞ்சாட்சரம்- சிவாயநம, நமசிவாய, தேசிகன்- குரு.

முயற்சி இல்லாமலே சாப்பாடு பெற எச்சில் இலைகள் உண்டு. அதுபோல எனக்கும் வீடுகள் தோறும் பிச்சை உணவு உண்டு. இயமனை வெல்ல ஐந்தெழுத்து மந்திரம் இருக்கிறது. என்னை வந்து எதிர்க்கும் பேய்க்குத் திருநீறு உண்டு. பிறவி என்கின்ற நோயை வெல்ல இறைவனது திருவருள் நோக்கம் உண்டு. நமக்கு என்ன பயம் எனக் கூறுகின்றார் பட்டினத்தடிகள். கூற்றை அஞ்ச உரைப்பன அஞ்செழுத்துமே என சம்பந்தரும் பாடியுள்ளார். எனவே நாம் திருநீற்றின் மகிமையையும், பஞ்சாட்சரத்தையும் மதித்து வாழ வேண்டும் என்பது வெளிப்படை.

இப்படியெல்லாம் நாயைப்பற்றிய அனுபவங்களைக் கொண்டு நல்ல கருத்துக்களை எமக்குத் தரும் பட்டினத்தடிகளின் கருத்துக்களை எம் வாழ்வோடு பொருத்திப் பார்க்க வேண்டும். இனி வரும் பாட்டைக் கவனிப்போம். நெஞ்சுக்குக் கூறுவதுபோல் இப்பாடல் அமைந்துள்ளது.

மண் காட்டிப் பொன்காட்டி மாயஇருள் காட்டிச்
செங்காட்டி வாடுகின்ற தேசிகனைப் போற்றாமல்
கண்காட்டும் வேசியர்தங் கண்வலையிற் சிக்கிமிக
அங்காடி நாம்போ லலைந்தனையே நெஞ்சமே.

மனமே! திருச்செங்காட்டிலே நடஞ் செய்கின்ற சிவகுருநாதனை வழிபடாமல், மண்காட்டி, பொன்னைக் காட்டி, மருட்சியில் வீழ்த்தும் இருளைக் காட்டி, கண்சாடை காட்டி மயக்கும் விலைமாதர்களுடைய கண் வலையிற் சிக்குண்டு கடைத்தெரு நாய்போல மிகவும் அலைந்து கெட்டனையே என்கிறது இப்பாடல். மணிவாசகர் நாயிலும் தான் தாழ்ந்தவன் என்று பாடியுள்ளார். பட்டினத்தார் நாய்போல அலைந்தேன் தன்னை நாயினும் கீழ்ப்பட்டவன் எனக் காட்டுகிறார். எனவே நாமும் நல்வழியில் நம்மை வழிப்படுத்துவோமாக.

---

பண்பு, நாகரிகம் என்பவற்றை இன்ன இன்னதுதான் என்று உறுதியிட்டுச் சொல்வது கடினம். "பண்பாடு" என்பதில் பல அம்சங்கள் இருந்தபோதிலும் நிச்சயமாக தன்னடக்கமும் விட்டுக்கொடுக்கும் தன்மையும் அதிலே அடங்கியிருக்கின்றன. ஒருவன் தன்னை அடக்கிப் பிறர் மனதறிந்து ஒழுகானாயின் அவனை நாகரீகமற்றவன் என்று சந்தேகமின்றிச் சொல்லலாம். ஒற்றுமையில் உயர்ந்தது எறும்பு. சாமர்த்தியத்தில் உயர்ந்தது வான்குருவி. நன்றியில் உயர்ந்தது நாய். வலிமையில் உயர்ந்தது யானை. தந்திரத்தில் உயர்ந்தது குள்ளநரி. ஒழுக்கத்துடன் வாழ்ந்திருந்தால் மட்டுமே மனிதன் உயர்ந்தவன். ஒழுக்கமுள்ள நீங்கள் இந்த உலகத்துக்கு ஒளியாக இருக்கின்றீர்கள். மலையின் உச்சியிலுள்ள பட்டணம் மற்றவர் கண்களுக்கு மறைந்திருக்க முடியாது.

***பேசிய பிறகு வருந்துவதைவிட பேசுவதற்கு முன் யோசிப்பது நன்று.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் நினைவில்...



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமுதாயப் பணிகளில் இலவச மருத்துவசேவையும் ஒன்றாக இருந்தது. அப் பணிக்கு ஆரம்ப காலத்திலிருந்து எமக்கு வேண்டிய மருந்துப் பொருட்களையும் ஆச்சிரமத்தின் செயற்பாட்டிற்கும் தன்னாலான பங்களிப்பை நல்கிவந்த வருமான ரட்ணம் மருந்தகத்தின் உரிமையாளர் அமரர் குமாரவேலு விஜயரட்னம் அவர்கள் மறைந்த செய்தி கேட்டு நாம் துயரடைகின்றோம்

அன்னாரின் ஆத்மா நிரந்தரமாக ஆண்டவனின் பாதார விந்தங்களில் இளைப்பாற எல்லாம்வல்ல பரம் பொருளைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# நீங்கா நினைவில்...



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளுக்கு தன்னாலான பங்களிப்பை நல்கிவரும் திரு ஆறுமுகநாதன் அவர்களின் துணைவியார் அமரர் ஆறுமுகானந்தன் பரமேஸ்வரி அவர்கள் கடந்த 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமான செய்திகேட்டு துயரடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சந்நிதியானின் பாதார விந்தங்களில் இளைப்பாற எல்லாம் வல்ல இறை வனைப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத வாராந்த நிகழ்வுகள்

**07.07.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "திருவாசக இன்பம்"

வழங்குபவர் :- திரு நா. நவராஜ் அவர்கள்

[உளவளத்துணையாளர்]

---

**14.07.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

"இன்னிசை"

சந்நிதியான் ஆச்சிரமம்

(பக்கவாத்திய சகிதம்)

---

**21.07.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

**28.07.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் ஆடி மாத வெளியீடு

வெளியீட்டுரை :- செல்வி தயாளினி குமாரசாமி அவர்கள்

[பல்கலைக்கழகம், பேராதனை]

மதிப்பீட்டுரை :- திருமதி சசிலேகா ஜெயராஜன் அவர்கள்

[சைவப்புலவர், ஆசிரியர்]

**307 ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org